பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 09 செவ்வாய்க்கிழமை 21.02.2023 கதிர் 105

**இனி இது ரகசியம் அல்ல!**

நேற்று மதியமளவில் எனது செய்தியாளர் அழைப்பெடுத்தார். அவரது குரலில் ஒருவித எகத்தாளம் தெரிந்தது. “என்ன சேர் கரைத்துரைப்பற்றுப் பிரதேச சபைக்கான தேர்தலில் தமிழ் அரசுக் கட்சி தராசு சின்னத்தில்

☞2

# தேர்தலைப் பெறும் வரை போராட்டங்கள் தொடரும்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சூளுரை

முன்வைத்த காலை ஒரு போதும் பின்வைக்க நாம் தயாரில்லை. தேர்தலைப் பெறும் வரை எமது போராட்டம் தொடரும்.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஐக்கிய மக்கள் சக்தியால் ஏற்பாடு செய்யப்பட்ட

☞2

## 13ஐ எதிர்ப்போர் குறித்து சந்திரிகா கடும் காட்டம்



அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராகக் கொதித்தெழும் நாடாளுமன்ற உறுப்பினர்களை மனநோயாளிகள்

☞2

## தேர்தல் இடைநிறுத்த மனு விசாரணை ஒத்திவைப்பு!



உள்ளூராட்சி சபைத் தேர்தலுடன் தொடர்புடைய அனைத்து செயற்பாடுகளையும் இடைநிறுத்தி உத்தரவிடுமாறு கோரி

☞2

## தேர்தலை மார்ச் 9 நடத்தவே முடியாது

உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்தது ஆணைக்குழு




பல்வேறு காரணங்களால் திட்டமிட்ட வகையில் உள்ளூராட்சி சபைத் தேர்தலை மார்ச் 9 ஆம் திகதி நடத்த முடியாத

☞2

மீண்டும் போராட்டம் வெடித்தாலும் என்ற அச்சத்தில்

# எம்பிக்களை பாதுகாக்கும் ஏற்பாடுகள் மும்முரம்


**வீடுகள், சொத்துக்கள் விவரங்கள் திரட்டுகிறது புலனாய்வுத்துறை**

(ந.லோகதயாளன்)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படும் சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ள நிலையில், மீண்டும் மக்கள் போராட்டங்கள் அதிகரித்து எழுச்சி ஏற்படலாம் என்கிற எச்சரிக்கையில் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அவர்களின் வீடுகள், சொத்துக்களையும் பாதுகாப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

☞2

## நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரத்தைப் பெற்றார் ரணில்



நேற்று நள்ளிரவுக்குப்பின்னர், எந்த நேரத்திலும் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைக்கப்பெற்றுள்ளது.

அரசமைப்பின் 70 (1) (அ) உட்பிரிவின் பிரகாரம் ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும்,

☞10

## சலுகைகளை அனுபவிக்கும் வேட்பாளர்கள்

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பிறகும் 2 ஆயிரத்து 500 இற்கும் அதிகமான வேட்பாளர்கள் கொடுப்பனவு–வாகனம்–எரிபொருள் ஆகிய சலுகைகளை அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர் என்று அறிய முடிகின்றது.

தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளன. இந்த வேட்பாளர்கள் இன்னும் உள்ளூராட்சி சபைகளின் தலைவர் களாகவும் உறுப்பினர்களாகவும் இருப்பதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கோட்டாபய தப்பியோடாமல் தேர்தலை நடத்தியிருக்கலாம்

சஜித்தின் சகா கிரியெல்ல கூறுகின்றார்

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியை விட்டு நாட்டை விட்டுத் தப்பியோடாமல் விசேட தீர்மானம் மூலம் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தியிருக்க வேண்டும்.

☞10



## ‘மொட்டு’ படுவீழ்ச்சியடைந்ததால் ஜே.வி.பி.யுடன் மோதுகின்றோம்!

ஐக்கிய மக்கள் சக்தி விளக்கம்

மொட்டுக் கட்சி கடுமையாக வீழ்ந்துவிட்டது. அதனால், தேர்தல் மேடைகளில் நாம் மோதும் ஒரு கட்சியாக ஜே.வி.பி. மாறியுள்ளது.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான

☞10



## திருத்தம் 13தான் தீர்வென எம் மீது திணித்தால் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தையே எதிர்ப்போம்

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அறிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

ஈழத் தமிழினம் அடியோடு நிராகரித்து வருகின்ற அரசமைப்பின் 13ஆவது திருத்தம்தான் தீர்வு என இந்தியா திணிக்க முயன்றால் அந்த இந்திய – இலங்கை ஒப்பந்தத்தையே கேள்விக்குட்படுத்துகிற நிலைக்கு நாங்கள் தள்ளப்படுவோம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எச்சரிக்கை விடுத்தார்.

கட்சியின் யாழ்ப்பாண அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசியபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

☞10



காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டியிடப்போகிறது என்று நீங்கள் போட்டிருக்கிறீர்கள், ஆனால் கட்சிக் குள்ளேயே விடயம் தெரியாதாமே?" என்றார்.

எனக்கு ஒரு மாதிரியாகிவிட்டது. தமிழ் அரசு தராசு சின்னத்தில் போட்டியி டும் என்கிற ஒப்பந்தம் பகிரங்கமாக, செய்தியாளர்கள் முன்னிலையில் கரைத்துரைப்பற்று பொது மண்டபத்தில் வைத்துச் செய்யப்பட்டது. அங்கே முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் க்கீம் இருந்தார். நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் இருந்தார். வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ரவி கரன் இருந்தார். அவர்கள் அங்கு என்ன பேசினார்கள் என்பதுகூட தொலைக் காட்சிகளில் அப்படியே காட்டப்பட்டது. அப்படியிருக்கும்போது இது என்ன புதுக்கதை என்றிருந்தது.

"ஏன் என்ன நடந்தது இப்போது? யார் என்ன சொன்னார்கள்?" என்று விசாரித்தேன்.

"இல்லை. சிறிதரன் ஐயா இப்பத்தான் எங்களிட்டைச் சொன்னார், கட்சியில தானும்தான் இருக்கிறாராம், ஆனால் அப்பிடியொரு சம்பவம் குறித்துத் தனக்குத் தெரியாதாம். இண்டைக்குக் காலமை ஊடகங்களிலை பார்த்துத் தான் தனக்குத் தெரியுமாம். அந்தச் செய்திகளைக் கூடுதலாப் படிச்சிட்டு விளக்கம் தாறன் எண்டு கடும் அதி ருப்தியோடை சொல்லிப்போட்டுப் போறார். நீங்கள் எண்டால் தமிழ் அரசுக் கட்சியும் முஸ்லிம் காங்கிரஸும் ஒண் டுக்கையொண்டு எண்டமாதிரி எழுதி வச்சிருக்கிறீங்கள்" எண்டார்.

"அவர் (சிறிதரன்) தொலைக்காட்சி களில செய்தி பார்க்கிறேல்லைப் போல, பார்த்திருந்தா முந்தாநாளே இந்த விச யம் தெரிஞ்சிருக்கும்" எண்டு சொல்லி முடித்துக்கொண்டேன் நான்.

இந்த ஒப்பந்தம் செய்யப்பட்டபோது கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனோடு கிளிநொச்சியில்தான் இருந்தார். முன் னதாக கிளிநொச்சிக்கு வரும் அவர் முல்லைத்தீவுக்கு இந்த ஒப்பந்த நிகழ் வில் கலந்துகொள்வதாகவும்தான் ஏற்பாடு. இப்ப, அதைப் பற்றிக் கட்சிக்கு ஒன்றும் தெரியாது என்ற பாணியில் சிறிதரன் சொல்லியிருக்கிறார் என்றால், நேற்றுக் கூட இருந்த மாவை அதைப் பற்றி சிறிதரனிடம் மூச்சுக்கூட விட வில்லையோ.

எனது செய்தியாளர் இந்த விடயத் தைச் சொல்லி வைத்த சிறிது நேரத்தி லேயே, கிழக்கில் இருந்து மற்றொரு செய்தியாளர் அனுப்பிய நீண்ட செய்தி மின்னஞ்சலில் வந்தது. கோவிந்தம் கருணாகரன் நடத்திய செய்தியாளர் சந்திப்புப் பற்றிய செய்தி அது.

அதில் கருணாகரனும் இந்த விடயம் பற்றிக் கருத்துச் சொல்லியிருக்கிறார். தமிழ் அரசுக் கட்சி தராசு சின்னத்தில் போட்டியிடுவது குறித்து செய்தியாளர் கள் அவரிடம் கேட்டதற்கு பின்வரு மாறு பதிலளித்திருக்கிறார் அவர்.

முல்லைத்தீவு பிரதேச சபையின் தமிழரசுக் கட்சியினுடைய வேட்பு மனு நிராகரிக்கப்பட்டிருந்தது. அதற்கெதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தார்கள். அந்த வழக்கும் நிராகரிக்கப்பட்டு இருந்தது. பின்னர் நேற்றைய தினம் முஸ்லிம் காங்கிரஸிடன் இணைந்த கட்சியின் தராசு சின்னத்திலே அந்த வேட்பாளர்களை பின்வாங்க வைத்து விட்டு, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர்களை உள்வாங்குவதற் கான ஒப்பந்தமொன்று உருவாகி இருப் பதாக அறியக் கூடியதாக இருக்கின் றது.

இந்த ஒப்பந்தமானது இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரசுக்கும் இடையிலான ஒப் பந்தமா? அல்லது சுமந்திரனுக்கும் முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையிலான ஒப்பந்தமா? என எனக்கு தெரிய வில்லை.

இலங்கைத் தமிழரசுக் கட்சியி னுடைய தலைவர் சேனாதிராசா கிளி நொச்சிக்கு நேற்று சென்றதால் அவர் அக்கூட்டத்தில் கலந்து கொள்ள வில்லை. அதே மாவட்டத்தைச் சேர்ந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி செயலாளர் ப. சத்தியலிங்கமும் செல்லவில்லை. சுமந்திரன் மாத்திரமே சென்றிருக்கின் றார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியினு டைய வேலை திட்டங்களில் கட்சியை விடச் சுமந்திரன் எடுப்பதுதான் தீர்மா னம் போல் எங்களுக்கு தெரிகின்றது."

இப்படிச் சொல்லியிருக்கிறார் அவர். கட்சிக்குள்ளேயும் கட்சிக்கு வெளியே யும் ஒரே மாதிரியான சந்தேகம். இது என்ன மாதிரியான டிசைன் என்று எனக்குப் புரியவில்லை. உங்களுக்கு ஏதாவது புரிகிறதா வாசகர்களே!

**- இடிமின்னல் -**

## தேர்தலைப் பெறும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தில் கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே சஜித் இதனைத் தெரிவித்தார்.

நேற்றைய எதிர்ப்புப் போராட்டம் கொழும்பில் சிறிது நேரம் கொட்டிய பெரும் மழையால் பாதிக்கப்பட்டது. பல இடங்களிலும் இருந்து பஸ்களில் வந்திருந்த போராட்டக்காரர்கள் வீதிக்கு இறங்க முடியாத அளவிற்கு மழை கொட்டித் தீர்த்தது. அது சற்றுத் தணிந் ததுமே போராட்டம் தொடங்கி யது.

காலநிலை சாதகமின்மை காரணம ாக பெரும் எண்ணிக்கையானவர்கள் போராட்டத்திற்கு வருவதும் தடுக்கப்பட்டி ருந்தது.

கொட்டும் மழைக்கு மத்தியிலும் பொலிஸாரும் தரைப் படையினரும் பெரும் எண்ணிக்கையில் போராட்ட இடத்தில் குவிக்கப்பட்டிருந்தனர். ஒரு கட்டத்தில் போராட்டக்காரர்களின் எண் ணிக்கையைவிட அங்கு குவிக்கப் பட்டிருந்த பொலிஸ் மற்றும் தரைப் படையினரின் எண்ணிக்கையே அதி கமாக இருந்தது.

போராட்டக்காரர்கள் அத்துமீறி முன்னேறினால் அவர்களைக் கட்டுப் படுத்தும் வகையில் முதலில் பொலி ஸாரும் அவர்களின் பின்னால் தரைப் படையினரும் என இரண்டடுக்குப் பாது காப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

போராட்டத்தில் மேலும் பேசிய ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச, கண்ணீர்ப்புகைக் குண்டுத் தாக்குதலுக்கு தமது அணி அஞ்சவில்லை எனவும், இலக்கை அடையும் வரை போராட்டம் தொடரும் எனவும் சஜித் சூளுரைத்தார்.

## எம்பிக்களை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தற்போது வசிக்கும் வீடுகள் மற்றும் அவர்களின் சொத்துக்கள் அமைந் துள்ள இடங்களின் விவரங்களை சேகரித்து அடையாளம் இடும் பணிகளில் புலனாய்வுத் துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக இடம்பெற்ற அரகலயப் போராட்டம் வன்முறையாக மாறியபோது ஆளும் தரப்பு அமைச் சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல்வாதிகளின் வீடுகள் எரிக்கப் பட்டு சொத்துக்கள் சூறையாடப்பட்டன. மீண்டும் ஒரு போராட்டம் ஏற்பட்டால் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பி னர்களின் அலுவலகங்கள் மற்றும் வீடுகள் தாக்குதலிற்குள்ளாகக்கூடும் என்ற அச்சம் நிலவுகின்றது. அத்தகைய நிலை எதிர்காலத்தில் ஏற்படுவதைத் தவிர்ப்பதற்காக அந்தந்த மாவட்டங் களில் உள்ள தரைப் படையினரைப் பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அவர்களைக் களத்தில் இறக்கி அமைச்சர்கள், நாடா ளுமன்ற உறுப்பினர்களையும் அவர் களின் சொத்துக்களையும் பாதுகாப் பதற்கு வசதியாகவே அவர்களின் இருப் பிடங்களின் விவரங்கள் புலனாய்வா ளர்களினால் சேகரிக்கப்படுகின்றன என்று கூறப்பட்டது.

இதற்கமைய யாழ். குடாநாட்டில் இருக்கும் 9 நாடாளுமன்ற உறுப்பினர் கள் மற்றும் வன்னி மாவட்டத்தில் செயல்படும் 6 நாடாளுமன்ற உறுப்பி னர்களின் வீடுகள், அலுவலகங்கள் தொடர்பில் நேற்று முதல் புலனாய்வா ளர்கள் தகவல்களை திரட்டி வருகின்ற னர்.

முக்கியமான அரச அலுவலகங் கள், கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் தொடர்பிலும் புலனாய்வாளர் கள் விவரங்களைச் சேகரித்து வரு கின்றன.

நாட்டில் மீண்டும் ஒரு அசாதாரண சூழ்நிலை ஏற்படலாம் என அரசு அஞ் சுவதன் காரணமாகவே இந்த ஏற்பாடு கள் மேற்கொள்ளப்படுவதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

## 13ஐ எதிர்ப்போர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்றே சொல்ல வேண்டும். முதலில் அவர்கள் நாட்டிலுள்ள சட்டங்களின் பரிந்துரைகளை முழுமையாக வாசிக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

13 ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதி ராக ஆளும், எதிரணியில் உள்ள நாடா ளுமன்ற உறுப்பினர்கள் சிலர் வெளி யிட்டு வரும் கருத்துக்கள் தொடர்பில் தெரிவித்தபோதே சந்திரிகா இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

1987ஆம் ஆண்டு ஜூலை 29ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் காரணமாக 13ஆவது திருத்தச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. இலங்கை நாடாளுமன்றத் தின் அனுமதியுடன்தான் இந்தத் திருத் தச் சட்டம் நடைமுறையில் உள்ளது.

ஆனால், இந்தத் திருத்தச் சட்டத்தில் உள்ள பரிந்துரைகள் இன்னமும் முழு மையாக அமுலாகவில்லை. அதனை முழுமையாக அமுல்படுத்தவேண்டும்.

அதிகாரங்களைப் பகிராமல் பிரச்சி னைகளுக்குத் தீர்வு காண முடியாது – என்றார்.

## தேர்தல் இடைநிறுத்த .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓய்வுபெற்ற இராணுவ கேர்ணல் டபிள்யூ.எம்.ஆர். விஜேசுந்தரவினால் தாக்கல் செய்யப்பட்ட எழுத்தாணை மனு மீதான விசாரணை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட் டுள்ளது.

குறித்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே அதனை ஒத்திவைத்து உயர் நீதிமன்ற நீதியர சர்கள் குழாம் உத்தரவிட்டது.

உயர் நீதிமன்ற நீதியரசர்களான எஸ்.துரைராஜா, ஷிரான் குணரத்ன ஆகியோர் அடங்கிய குழாம் முன்னி லையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

இதன்போது தேர்தல்கள் ஆணைக் குழு சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி சாலிய பீரிஸ், தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் 23ஆம் திகதி க்கு முன்னர் நடைபெறாது என்பதால் குறித்த தினத்திலேயே விசாரணை களை முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுத்தார்.

மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதி பதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா மற்றும் இடையீட்டு மனுதாரர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்காத காரணத் தால் மனுவை திட்டமிட்டவாறு எதிர்வரும் 23ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்வதற்கு நீதியரசர்கள் குழாம் உத் தரவிட்டது.

## தேர்தலை மார்ச் 9 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை ஏற்பட்டுள்ளது என்று தேர் தல்கள் ஆணைக்குழு நேற்று உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

நகர்த்தல் பத்திரம் ஒன்றினூடாக தேர்தல் ஆணைக்குழு இதனை உயர் நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

தவிர்க்க முடியாத பல தடைகள் காரணமாக மார்ச் 9ஆம் திகதி தேர்தலை நடத்துவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று குறித்த நகர்த்தல் பத்திரத்தில் தேர்தல் ஆணைக்குழு சுட்டிக்காட்டி யுள்ளது.

தேர்தலுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்குவது கடினம் என திறைசேரியின் செயலாளர் ஏற்க னவே ஆணைக்குழுவிடம் தெரிவித் துள்ளார்.

410.6 மில்லியன் ரூபா நிதி வழங்கப் படும்வரை வாக்குச்சீட்டுகளை அச்சிட்டு வழங்க முடியாது என்று அரச அச்சகத் தலைவர் அறிவித்துள்ளார்.

தேர்தல் வாக்குச்சீட்டுகளை அச்சி டுவதற்குத் தேவையான பாதுகாப்பைப் பெற்றுக்கொடுப்பதற்குப் பொலிஸ் மா அதிபர் தவறியுள்ளார் அதற்காக செலுத்த வேண்டிய கட்டணம் மூன்று மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தேர்தலுக்குத் தேவையான வாகன எரிபொருள் மற்றும் ஏனைய வசதி களை வழங்குவதற்குப் பொறுப்பான அரச நிறுவனங்களுக்கு அறிவித் துள்ள போதிலும், அதற்கான நடவடிக் கைகள் முன்னெடுக்கப்படவில்லை.

திறைசேரியின் செயலாளர் மற்றும் நிதி அமைச்சின் செயலாளர், மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர்,

(10ஆம் பக்கம் பார்க்க)




# மூவர் கைது

கொழும்பு, நாரஹேன்பிட்டி பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து 38 லட்சத்துக்கும் அதிக பெறுமதியான சொத்துக்களை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் மூவர் மொரட்டுவை பிரதேசத்தில் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்படி பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து 38 லட்சத்துக்கும் அதிக பெறுமதியான சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுக்கு அமைவாக கொழும்பு பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

இந்நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில் மொரட்டுவை பிரதேசத்தில் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதன்போது சந்தேக நபரிடமிருந்து 6 கிராம் 253 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருளும் மீட்கப்பட்டுள்ளது.

சந்தேகநபர் கடந்த 18 ஆம் திகதி மொரட்டுவ நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு 7 நாள்கள் தடுப்பு காவலில் வைக்க உத்தர விடப்பட்டிருந்தது.

இந்நிலையில் சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் கொள்ளையிடப்பட்ட சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் பெறப்பட்ட 2 லட்சம் பெறுமதியான பணம் மீட்கப்பட்டுள்ளது.

மேலும், திருடப்பட்ட தங்க மாலை ஒன்று சந்தேக நபரின் உறவினர் ஒருவரின் மகனுக்கு வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். மேற்படி நபரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 43 மற்றும் 28 வயதுடையவர்கள் எனவும் அவர்கள் மொரட்டுவை பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் இருவரும் புதுக்கடை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தபட்டுள்ளார்கள். கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# பிரபாகரன் திரும்பி வந்தாரானால் பேறுபெற்ற இனமாக இருப்போம்

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், பெப். 22

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் வந்தால் உலகத்திலே பேறுபெற்ற இனமாக நாங்கள்தான் இருப்போமென தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய பேரணியில் கலந்து கொண்டதற்காக அவர் மீது தொடுக்கப்பட்ட வழக்குக்காக நேற்று யாழ்ப்பாணம் நீதிமன்றத்திற்கு வந்திருந்த அவர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் குறித்து உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ. நெடுமாறன் கூறியுள்ள விடயம் தொடர்பில் செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினர்.

அதற்கு, “நெடுமாறன் கூறியதை அவருடைய கருத்தாகவே பார்க்கிறேன். இதற்கான மேலதிக பதிலையும் அவரேதான் சொல்ல வேண்டுமென நான் நினைக்கிறேன். எங்களுக்கு அதைப் பற்றி தெரியாது. ஆனால் அவர் கூறியது போல பிரபாகரன் உயிருடன் இருந்து, திரும்பி வந்தால் இந்த உலகத்தில் பேறுபெற்ற இனமாக நாங்கள் இருப்போம்” என்றார்.

நேரில் வந்தால்தான் நம்ப முடியும்.

இதேவேளை, போர் முடிந்து 14 ஆண்டுகளுக்குப் பின்னர் பிரபாகரன் உயிரோடு இருக்கிறார் என்றால், அவர் நேரில் வந்தால்தான் நம்ப முடியும் என்று தெரிவித்திருக்கிறார் தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தம் கருணாகரன்.

மட்டக்களப்பில் திங்கட்கிழமை செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசிபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

ஆயுதப் போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு 14 வருடங்கள் நிறைவடைவதற்கு இன்னும் ஓரிரு மாதங்களே இருக்கின்றன. இந்தப் போரில் ஆயிரக்கணக்கான போராளிகள் கொல்லப்பட்டார்கள். ஆயிரக்கணக்கானவர்கள் பாதுகாப்புத் தரப்பினரிடம் கையளிக்கப்பட்ட பின்னர் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இந்த நிலையில் 14 வருடங்களுக்கு பின்பு பழ. நெடுமாறன் ஒரு குண்டை தூக்கிப் போட்டு இருக்கின்றார். இது உலகம் முழுவதிலும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி இருக்கின்றது.

நானும் நீண்ட காலமாக ஆயுதப் போராட்டம், அரசியலில் என்று இருப்பவன் என்கின்ற ரீதியிலே அத்தனை உயிர்களும் இழக்கப்பட்ட பின்னர் பிரபாகரன் தப்பிச் சென்றிருப்பார் என்பதனை நம்ப மாட்டேன். அவராகப் பொது வெளியில் தோன்றினால் மாத்திரமே அவர் உயிரோடு இருக்கின்றார் என்பதனை நாங்கள் உறுதி செய்ய முடியும் – என்றார்.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நல்லவிடயங்கள் மக்களிடமும் கொண்டுசெல்லப்படவேண்டும்

முல்லைத்தீவு மாவட்டம் கரைத்துரைப்பற்று பிரதேச சபைக்கான தேர்தலுக்கு வேட்புமனுத் தாக்கல் செய்வதைத் தவறவிட்ட தமிழ் அரசுக் கட்சி அதற்கான மாற்று ஏற்பாடாக ஐக்கிய தேசியக் கூட்டமைப்பு என்கிற கட்சியின் தராசு சின்னத்தில் போட்டியிட ஏற்பாடுகளைச் செய்துகொண்டுள்ளது. இது தொடர்பான ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் ஒரு முக்கியமான கருத்தைத் தெரிவித்திருந்தார்.

தமிழ் அரசுக் கட்சி மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றின் நிறுவுனத் தலைமைகளுக்கு இடையே அவசியமற்ற வகையில் முரண்பாடுகள் வந்ததில்லை, அந்தளவிற்குப் புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் இருந்தது என்று தெரிவித்திருந்தார். அத்தகைய ஒரு நிலையை மீண்டும் எட்டுவதற்கான அடித்தளத்தை இந்த நிகழ்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் தனது விருப்பத்தை வெளியிட்டார்.

அதை அவர் சொல்லும்போதிருந்த அவரது உடல் மொழியில் அந்தக் கருத்தில் அவருக்கிருந்த அவநம்பிக்கை அல்லது அது இலகுவான முயற்சியல்ல என்கிற விடயம் வெளிப்பட்டாலும், அவர் தெரிவித்த அந்தக் கருத்து கவனத்துக்குரியது.

அந்தக் கூட்டத்தில் பேசிய தமிழ் அரசுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனும்கூட, முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் ஹக்கீம் அவராகவே முன்வந்து இந்த விடயத்தில் உதவினார் என்பதை மேடையில் சிலாகித்திருந்தார்.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது இந்தக் கட்சிகளின் நிறுவுனர்களான எஸ்.ஜே.வி.செல்வநாயகத்துக்கும் எம்.எச்.எம்.அஷ்ரப்பிற்கும் மட்டுமல்ல இன்றிருக்கக்கூடிய தலைமைகளுக்கு இடையேயும்கூட நல்லதொரு புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் இருப்பது தெரிகிறது. அது சிறப்பானதும்கூட.

அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்த முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் தமிழ் மக்களுக்குத் தீர்வு இல்லையேல் முஸ்லிம்களுக்கும் தீர்வு இல்லை என்று மிகத் தெளிவாகக் கூறியிருந்தார். அதுவும்கூட மிகச் சரியான புரிந்துணர்வுதான்.

இப்படித் தலைமைகள் மட்டத்தில் புரிந்துணர்வும் ஒத்துழைப்பும் இருந்தாலும் அந்த உணர்வு கட்சித் தொண்டர்கள் மத்தியிலும் மக்கள் மத்தியிலும் காணப்படுகின்றதா என்றால் இல்லை என்பதே பதில்.

கிழக்கில் கல்முனை தமிழ் பிரதேச செயலக விவகாரம், இப்போது கல்முனைப் பொது நூலகததிற்குப் பெயர் மாற்றுவது என்று இனங்களிடையே முரண்பாட்டையும் வன்மத்தையும் வளர்க்கக்கூடிய செயல்களில் முஸ்லிம் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களின் பங்களிப்பே முக்கியமானது. குறுகிய சொந்த நலன்களைக் கருத்தில்கொண்டு அங்குள்ள அரசியல்வாதிகள் இதனைச் செய்கிறார்கள் என்று கடந்து சென்றுவிட முடியாது. ஏனென்றால், அங்கு ஏற்படுத்தப்படும் உதைப்பு தமிழ், முஸ்லிம் இனங்கள் மத்தியில் பெரும் அதிர்வை ஏற்படுத்துகின்றது. முரண்களை வளர்க்கிறது. விரோத்தைத் தீவிரமாக்குகிறது.

இந்தத் தீவில் ஈழத் தமிழர்கள், முஸ்லிம்கள், மலையகத் தமிழர்கள் ஆகிய மூன்று தரப்புக்களுமே சிங்கள பௌத்த பெருந்தேசியவாதத்தால் அடக்குமுறைக்கு உள்ளாகியிருக்கின்றன. அதிலிருந்து மீண்டு ஒரு தீர்வை அடைவதற்கான முயற்சியில் இருக்கின்றன. இந்த முயற்சியில் ஒருவரை ஒருவர் தவிர்த்து எந்த உரிமைகளையும் அடைந்துவிட முடியாது. தீர்வுக்கான அடிப்படைப் புள்ளியில் இந்த மூன்று தரப்புக்களுமே ஒரு பொது இணக்கப்பாட்டைக் கண்டடையவேண்டும். அதற்கு இந்த மூன்று தரப்புகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு மற்றும் ஒத்துழைப்பும் அவசியம்.

அது தலைவர்களிடம் மட்டமல்லாது அடிமட்டத் தொண்டர்களிடமும் தாம் சார்ந்த மக்களிடமும் ஏற்படுத்தப்படவேண்டும். இல்லாதவரையில் தலைமைகளின் நெருக்கத்தால் பயன் ஏதும் கிட்டாது, மக்களுக்கு.

# வீதியோரம் குழாய் பொருத்தும் பணியை மதியத்தில் நிறுத்தி வைக்கக் கோரிக்கை

## பாடசாலை விடும் நேரத்தில் விபத்தை தடுக்க முயற்சி

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.22



யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் இடம்பெறும் நீர்க்குழாய் பொருத்தும் பணிகளைப் பாடசாலை விடும் நேரத்தில் நிறுத்தி வைக்குமாறு தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சேவையிடம் முதல்வர் இ.ஆனல்ட் கோரிக்கைவிடுத்துள்ளார்.

யாழ்ப்பாணம் நகரிற்கான குடிதண்ணீர் விநியோகக் குழாய்களை நிலத்துக்கடியில் புதைக்கும் பணிகள் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. வீதியோரங்களை கீறிப் பிளந்து, பின் கனரக வாகனங்களின் உதவியுடன் அங்கு தோண்டி குழாய்களைப் பொருத்தி வருகின்றனர். இந்தப் பணி நடைபெறும்போது வீதியின் ஒரு பக்கத்தை பணி நடக்கும் இடத்தில் மறித்து விடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கின்றனர். இதனால் அந்த இடத்தில் வீதியின் அரைவாசிப் பகுதியூடாகவே போக்குவரத்து இடம்பெறுகிறது. இது போக்குவரத்து நெருக்கடியை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக பாடசாலை விடும் நேரத்தில் கடும் நெருக்கடியை ஏற்படுத்துகின்றது.

பாடசாலைகள் விடும் நேரத்தில் விபத்துக்களைத் தவிர்க்கும் நோக்கில், வீதியோரம் குழாய்களைப் பொருத்தும் பணிகளை நிறுத்தி வைக்குமாறு மாநகர முதல்வர் கோரி உள்ளார். தினமும் ஒரு மணியில் இருந்து 2.30 மணி வரை பணிகளை நிறுத்தி வைக்குமாறு மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு அவரச அறிவித்தலாகத் தெரியப்படுத்தியுள்ளார்.

# வடமாகாண இளைஞர், யுவதிகள் தொழில்கல்வி பெற அரிய வாய்ப்பு

வடக்கு மாகாணத்தில் இளைஞர், யுவதிகளுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள 'கியார் கிவ்வேர்ஸ்' கற்கை நெறி (என்.வி.கியு. லெவல் – 3) தொடர்பான தகவல் வழங்கும் செயலமர்வு 23 ஆம் திகதி புதன் கிழமை காலை 10.30 மணிக்கு செம்மணி வீதி, நல்லூர் என்னும் முகவரியில் அமைந்துள்ள வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற உள்ளது.

சுகாதாரத்துறைசார் தொழில் முயற்சியில் ஈடுபடவிரும்புவோர்க்கு 'நேற்றா' நிறுவனத்துடன் இணைந்து இந்தக் கற்கை நெறி ஆரம்பிக்கப்பட உள்ளது.

6 மாதங்கள் நடைபெற உள்ள இந்தப் பயிற்சி நெறியில் மருத்துவப் பயிற்சி 5 மாதங்களும் அடிப்படைப் பயிற்சி ஒரு மாதமும் நடைபெற உள்ளன. இந்தப் பயிற்சிக்கான வயதெல்லை 19 - 35 வயது ஆகும். ஆயினும் 36 - 40 வயது வரை பரிசீலிக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பயிற்சிகளைப் பெறுவதற்கு முன் அனுபவம் தேவையில்லை என்றும் வடக்கு மாகாணத்தில் 5 மாவட்டங்களிலும் உள்ள 'நேற்றா' பயிற்சி நிலையத்தில் பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# உணவுப் பாதுகாப்பின்மை இலங்கையில் தொடர்கிறது

## உலக உணவுத் திட்டம் தெரிவிப்பு



இலங்கை தொடர்ந்தும் அதிகளவான உணவுபாதுகாப்பின்மையை எதிர்கொண்டுள்ளது என உலக உணவு திட்டம் தெரிவித்துள்ளது.

உலகஉணவுதிட்டத்தின் இலங்கைக்கான பதில் இயக்குநர் ஜெராட் ரெபெலோ இதனை தெரிவித்துள்ளார்.

யுஎஸ்எயிட்டின் மனிதாபிமான உதவிகளுக்கான பணியகத்தின் ஆசிய இலத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கான இயக்குநர் ஸ்டீபனி வில்கொக்கின் விஜயம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் ஜெராட் ரெபெலோ இதனைத் தெரிவித்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்ந்தும் மிகவும் அதிகளவான உணவு பாதுகாப்பின்மையை எதிர்கொள்கின்றது எனத் தெரிஸ்ரீவித்துள்ள அவர், 30 வீதமான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக வறிய மக்கள் மத்தியிலேயே இந்தப் பாதிப்பு அதிகமாக காணப்படுகின்றது எனவும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசாங்கமும் மக்களும் வழங்கி வரும் உதவிகள் தொடர்பாகப் பெரும் நன்றியுடையவர்களாக காணப்படுவதாக தெரிவித்துள்ள அவர், இந்த உதவிகள் உலக உணவு திட்டம் அவசர உதவிகளை வழங்குவதற்கு உதவியாக அமைந்தது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அமெரிக்காவின் உதவிகள் உலக உணவுதிட்டம் மனிதாபிமான உதவிகளை வழங்கவும் உணவுபாதுகாப்பின்மை மோசமான நிலையை அடைவதைத் தவிர்ப்பதற்கும் உதவும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுஎஸ்எயிட் இலங்கைக்கான விஜயத்தின் போது இரத்தினபுரிக்கு விஜயம் மேற்கொண்டார். இந்த விஜயத்தின் போது உணவு விலை அதிகரிப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ள உணவு பாதுகாப்பற்ற நிலையில் உள்ள குடும்பங்களை அவர் சந்தித்துள்ளார்.

இலங்கைக்கான விஜயத்தின் போது யுஎஸ்எயிட் அதிகாரி உணவு மற்றும் ஊட்டசத்து போசாக்கு நிலைகளை அறிந்துகொள்வதற்காக வறிய கிராம சமூகங்களை சந்தித்துள்ளார்.

இதனடிப்படையில் அவர் இரத்தினபுரிக்கு விஜயம் மேற்கொண்;டார்.

அவர் அங்கு சந்தித்த சமூகம் விரைவில் உலக உணவு திட்டத்தின் மூலம் 20இ000 ரூபாய் உதவியை பெறவுள்ளது.

நான்கு மாதங்களிற்கு இந்த நிதி உதவி


# சிக்கந்தரின் நூல் கத்தாரில் வெளியீடு









(நூருல் ஹுதா உமர்)

புதுகை சிக்கந்தர் எழுதிய காயங்களின் கரும்பலகை என்ற நூல் வெள்ளிக்கிழமை மாலை கத்தார் வொண்டர் பேலஸ் ஹோட்டலில் வெளியிடப்பட்டது.

கத்தார் சகாபாக்கள் நூலகத்தின் தலைவர் மணிகண்டன் ஐயப் பன் தலைமை தாங்கிய இந்த நிகழ்வில் இலக்கிய ஆர்வலர் கத்தார் முத்தமிழ் மன்றம் ரெஜினா கோபால்சாமி, சட்டத்தரணி பட்டிமன்ற பேச்சாளர் கத்தார் முத்தமிழ் மன்றம் சிந்து தமிழ், எழுத்தாளர் பாத்திமா நிஸ்ரா ஆகியோர் வாழ்த்துரை நிகழ்த்தினர்.

கத்தார் காயிதே மில்லத் பேரவை தலைவர் முஹம்மத் முஸ்தபா நூலை வெளியிட்டு வைத்தார். இந்நிகழ்வில் சிறப்பு அதிதிகளாக கவிஞர் கொடிநகரான், ராமசெல்வம் (கத்தார் தமிழர் சங்கம்), குரு (கத் தார் முத்தமிழ் மன்றம்), விஜய் ஆனந்த் (பாரதி மன்றம்), ஒருங்கிணைந்த தமிழர் பேரவை தலைவர் சமீர், செயலாளர் வலி யுல்லாஹ், கத்தார் அயலக திமுக அணி துணைச் செயலாளர் மதன்குமார், ஸ்கை தமிழ் வலையமைப் பின் பணிப்பாளர் ஜே.எம்.பாஸித் உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர். இது கவிஞர் புதுகை சிக்கந்தர் அவர்களின் இரண்டாவது நூலாகும்.

# கொக்கைன், ஐஸ் வைத்திருந்த நபர் தெஹிவளையில் பொலிஸாரால் கைது

கொழும்பு, தெஹிவளை பிரதேசத்தில் கொக்கைன், ஐஸ் உள்ளிட்ட பல்வேறு போதைப் பொருள்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

தெஹிவளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கவுடான வீதியின் பிரதேசத்தில் தெஹிவளை பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது 84 கிராம் கொக்கைன், 36 கிராம் ஐஸ போதைப்பொருள், 535 கிராம் ஹசீஸ் மற்றும் 30 போதைப்பொருள் மாத்திரைகளுடன் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் 33 வயதுடைய மருதானை பிரதேசத்தைச் சேர்ந்தவராவார். இவர் கல்கிஸ்ஸ நீதிவான் நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். தெஹிவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

நாவலப்பிட்டிய வைத்தியசாலைக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற விபத்தில் இரண்டு பிள்ளைகளின் தந்தை உயிரிழந்தார்.

நாவலப்பிட்டி, பவ்வாகம – புதிய தேசிய வீடமைப்புப் பகுதியைச் சேர்ந்த 59 வயது நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நாவலப்பிட்டியில் இருந்து கொத்மலை நோக்கிப் பயணித்த வான் ஒன்று குறுக்கு வீதியில் நுழைய முற்பட்ட போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அப்போது, குறித்த நபர் வானின் கண்ணாடியில் மோதி கீழே விழுந்து பின்னர் வானில் சிக்கி உயிரிழந்துள்ளார்.

# நோர்டன் பிரிட்ஜ் பஸ் விபத்து சாவு 3 ஆக உயர்ந்தது

நோர்டன் பிரிட்ஜ் விபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆக அதிகரித்துள்ளது.

23 வயதுடைய ஆண் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆடம்ஸ் சிகரத்திலிருந்து யாத்திரிகர்கள் குழுவை ஏற்றிச் சென்ற பஸ் நேற்றுமுன்தினம் மாலை பள்ளத்தில் விழுந்ததில் இரண்டு பெண்கள் இறந்ததுடன் 25 பேர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை கினிகத்தேன வீதியூடாக பஸ்ஸின் சாரதி மற்ற வாகனங்களை அனுமதிக்க முற்பட்ட போது குறித்த பஸ் நோர்டன் பிரிட்ஜ் பகுதியில் 150 அடி பள்ளத்தில் விழுந்துள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

விபத்து இடம்பெற்ற போது பஸ்ஸில் 15 பெண்களும், 13 ஆண்களும் பயணித்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் நாவலப்பிட்டிக்குக் கொண்டு செல்லப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமடைந்தவர்களில் இருவர் கண்டி தேசிய வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், ஒருவர் பேராதனை போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.



# கல்முனை பொது நூலக பெயர் மாற்றம் தேவைதானா?

- அகீல் -

## தமிழரிடையே கொதிநிலை

கல்முனை மாநகர சபையின் விசேட கூட்டம் ஒன்று பரபரப்பான சூழ்நிலைக்கு மத்தியில் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை இடம்பெற விருக்கின்றது.

மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில், சபை சபா மண்டபத்தில் இடம் பெறவிருக்கும் இந்த விடே கூட்டத்தில், கல்முனை மாநகரில் இயங்கும் பொது நூலகத்திற்கு முன்னாள் அமைச்சரும், முன்னாள் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சருமான மர்ஹும் ஏ.ஆர்.மன்சூரின் பெயரைச் சூட்ட வேண்டுமென மென்மொழியப்பட்டுள்ள பிரேரணை விசேடமாக ஆராயப்பட்டு நிறைவேற்றப்படவுள்ளதாகத் தெரியவருகின்றது.

அண்மையில் நடைபெற்ற மாநகர சபையின் 59ஆவது மாதாந்தக் கூட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவர் இந்த பெயரிடல் விவகாரத்தை தமது உரையின்போது முன்வைத்தார். எனினும் சபையின் தமிழரசுக் கட்சி உறுப்பினரான சந்திரசேகரம் ராஜன் இதனைக் கடுமையாக எதிர்த்தார். ரெலோ அமைப்பின் பிரதித் தலைவருமான ஹென்ரி மகேந்திரன் உட்பட தமிழர் தரப்பு உறுப்பினர்கள் தற்போதய சூழ்நிலையில் இந்த விவகாரத்தைக் கைவிடுவதுடன், ஆற அமர இரு தரப்பும் பேசி முடிவு செய்யலாமெனத் தெரிவித்தனர். இதனை அடுத்து இந்த விடயத்தில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றப்படாது அமர்வு முடிவுறுத்தப்பட்டது.

கல்முனை தமிழ் பிரதேச செயலகத்தை முழுமையான பிரதேச செயலகமாகத் தரமுயர்த்த வேண்டுமென்ற கல்முனை வாழ் தமிழ் மக்களின் உயிர் மூச்சான முயற்சிகளுக்கு, பிரதேச முஸ்லிம் அரசியல்வாதிகள் சிலர் முட்டுக்கட்டையாச்க செயற்பட்டு வரும் விடயத்தால் தமிழ் முஸ்லிம் உறவில் விரிசல் நீடித்து வரும் நிலையில், பொது நூலக பெயரிடல் விவகாரம் மேலும் குழப்ப நிலையையும், கொதி நிலையையும் ஏற்படுத்தியுள்ளது. இது தமிழ் – முஸ்லிம் இன முறுகலை ஏற்படுத்திவிடும் மற்றொரு வாய்ப்பை உருவாக்க அனுமதிக்கக்கூடாது என்பதை அந்தக் கூட்டத்தில் இருந்த தமிழ் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

ஆனால், சபையில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவு தம்மிடமே இருக்கின்றது என்கிற மிதப்பில் கல்முனை பொது நூலகத்திற்கு மன்சூரின் பெயரை சூட்டியே ஆக வேண்டுமென முஸ்லிம் காங்கிரஸ் தரப்பினர் வரிந்து கட்டி நிற்பதாகவும்,

மன்சூரின் புதல்வர் ரஹ்மத் மன்சூர் மாநகர சபையின் பிரதி மேயராக இருப்பது இந்த விடாப்பிடி நிலைக்குக் காரணமெனவும் கூறப்படுகின்றது.

இதன் நிமித்தமே மாநகர சபையின் ஆயுட்காலம் முடிவடைவதற்குள் பொது நூலகத்திற்கு மன்சூரின் பெயரைச் சூட்டும் தீர்மானத்தை நிறைவேற்றி விடவேண்டுமெனும் நோக்கில் சபையின் விசேட கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் கல்முனை வாழ் தமிழ் மக்கள் மத்தியில் மீண்டுமொரு பெரும் கொதி நிலையும் ஏற்படுத்தியுள்ளது.

இதேவேளை கல்முனை மாநகரசபையில் அங்கம் வகிக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் சாமுவேல் சந்திரசேகரம் (ராஜன்) தவிர ஏனைய சகல கூட்டமைப்பு உறுப்பினர்களுடன் 10 தமிழ் உறுப்பினர்கள் ஒப்பமிட்டு எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவிருக்கும் மாநகர சபையின் விசேட கூட்டத்தை இரத்துச் செய்யுமாறுகோரி கடிதம் ஒன்றை மாநகர மோயரிடம் நேரில் சமர்ப்பித்துள்ளனர் எனவும்

இக்கடிதத்தின் பிரதிகள் மேலதிக நடவடிக்கைகளுக்காக கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகவும் முன்னாள் எதிர்க் கட்சித்தலைவரும், கூட்டமைப்பு உறுப்பினருமான ஹென்ரி மகேந்திரன் தெரிவித்தார்.

வழமைக்கு மாறாக இந்த விசேட கூட்டம் நடத்தப்பட்டு உரிய தீர்மானம் நிறைவேற்றப்படுமானால் தமிழர் தரப்பினர் நீதிகோரி சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்க முடிவுசெய்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேலும் கல்முனை மாநகரிலுள்ள முப்பதுக்கும் மேற்ப்பட்ட இந்து கிறிஸ்துவ ஆலங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் சார்பாக இந்த விடயம் தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுநருக்கு மனு ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பொது அமைதிக்குப் பங்கமாகவும், கல்முனை மாநகரில் தமிழ் முஸ்லிம் இனமுறுகலுக்கு வழிவகுப்பதாகவும் அமையவுள்ள குறித்த பெயர் மாற்றத் தீர்மானத்தை தடுக்குமாறும்,

மூவின மக்கள் வாழும் கல்முனையிலமைந்துள்ள பொது நூலகம் அதே பொதுவான பெயரிலேயே இயங்க ஆவன செய்யுமாறும் குறித்த மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் கல்முனை மாநகரை களேபர பூமியாக மாற்றாது சுமூகமான தீர்வு எட்டப்படவேண்டுமென்பதே இன்றைய நிலையில் பலரதும் அவாவாகும்.

# நூலகத்தின் பெயர் மாற்றப்படுவதற்கு தமிழ் உறுப்பினர்கள் கடும் கண்டனம்

கல்முனை பொது நூலகத்திற்கு தனிநபரின் பெயரைச் சூட்ட முனைவதை வன்மையாக கண்டிக்கிறோம். பெயரை மாற்றினால் இனமுரண்பாடு உருவாக வாய்ப்புள்ளது.

இவ்வாறு கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான சந்திரசேகரம் ராஜன், வடிவுக்கரசு சந்திரன், கதிரமலை செல்வராஜா ஆகியோர் தெரிவித்தனர்.

கல்முனையில் நேற்று வெள்ளிக்கிழமை இவர்கள் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இந்தக் கருத்தை அவர்கள் வலியுறுத்தியிருந்தார்கள்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

கல்முனை மாநகர சபையின் இந்த மாத அமர்வில் கல்முனை பொது நூலகத்திற்கு முன்னாள் அமைச்சரான ஏ.ஆர்.எம்.மன்சூரின் பெயரை சூட்டுவதாக மாதாந்த நிகழ்ச்சி நிரலில் இல்லாமல் தனிநபர் பிரேரணை முன்வைக்கப்பட்டமை கண்டிக்கத்தக்கது.

அதுவும் அமர்விற்கு முன்னர் ஒரேயொரு உறுப்பினரான ஹென்றி மகேந்திரனுடன் மூடிய அறைக்குள் பேசியதாக அறிகிறோம். சபையில் 7 தமிழ் உறுப்பினர்கள் இருக்கின்றபோதும் வேறு எவரும் அந்தச் சந்திப்புக்கு அழைக்கப்பட்டிருக்கவில்லை.

கடந்த காலங்களில் முன்னாள் அமைச்சராக செயற்பட்ட, மன்சூர் இன மத பேதங்களின்றி சிறப்பான சேவைகள் செய்தவர். தமிழ் மக்களுக்கும் பல வழிகளில் உதவியவர். அவர் போன்று ஒரு முஸ்லிம் தலைவர் இன்றில்லை. அந்த குறைபாடு தான் இன்று இனமுரண்பாட்டிற்கு காரணம். அவர் நல்லவர். அதில் இருவேறு கருத்துக்கிடமில்லை.

இருந்தபோதிலும் தற்போது எதிர்வரும் தேர் தலை குறிவைத்து சிலர் இவ்விடயத்தை அரசியலாக்கி




மக்கள் மத்தியில் குழப்பங்களை ஏற்படுத்த முனைகின்றனர். அதன் வெளிப்பாடே இத் தனிநபர் பிரேரணையாகும்.

கல்முனை பொது நூலகமானது இரு சமூகத்தைச் சேர்ந்தவர்களின் பொதுச்சொத்து. அப்படியிருக்கும்போது அதற்கு ஒரு சமூகத்தவரின் பெயரை மாற்றச் சிலர் மறைமுகமாக முயற்சிக்கின்றனர். இதனை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். சில அரசியல்வாதிகளே தங்களது தனிப்பட்ட விருப்பங்களை நிறைவேற்ற இவ்வாறு செயற்படுகின்றனர். தேர்தல் காலங்களில்தான் இவர்கள் இவ்வாறு செயற்படுகின்றனர். கல்முனை மாநகர கட்டடத்தில இயங்குகின்ற நூலகமானது இதுவரை பெயர்ப்பலகை இல்லாமல் இயங்கி வருவதை யாரும் கண்டுகொள்ளவில்லை. ஆனால் அண்மையில் அங்கு மாநகர சபைப் பெயர்ப் பலகை நாட்ட ஏற்பாடு செய்யப்பட்டது. அப்போது ஒருவர் மாநகர சபை ஊழியர்களை அடித்து விரட்டியிருந்தார்.

அது கல்முனை பொது நூலகம் என்றே இதுவரை காலமும் அழைக்கப்பட்டு வந்துள்ளது. அதுவே தொடரவேண்டும் என்பதே அனைவரினதும் விருப்பம். தமிழ் மக்களாகிய நாங்கள் இந்த செயற்பாட்டை முற்றாக நிராகரிக்கின்றோம். ஏனெனில் இனங் கள் இரண்டும் ஒன்றுபட்டதுதான் கல்முனை பிரதே சம். கல்முனை மாநகர சபை இரு சமூகத்திற்கும் சொந்தமானது. எனவே இனங்களுக்கிடையே முரண்பாட்டை ஏற்படுத்தாதீர்கள் என கேட்டுக் கொள்கின்றோம் – என்றனர்.



கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்

# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

SPECIAL MENU PACKAGE

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர் Kalaikkathir

# விரட்டியடிக்கப்பட்ட கோட்டா பெயரில் முல்லைத்தீவில் எதற்கு படை முகாம்?

சாணக்கியன் கேள்வி









மக்களால் விரட்டியடிக்கப்பட்ட கோட்டாபயவின் பெயரில் படை முகாம் எதற்கு? – என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வி எழுப்பினார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கான வேட்பாளர் அறிமுகக் கூட்டம் புதுக்குடியிருப்பு நகரில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:–

இந்த மாவட்டத்தில் வீதியின் இரண்டு பக்கங்களிலும் மக்களைக் காண முடியாத ஒரு நிலை இங்கு காணப்படுகின்றது. நாம் மக்களைப் பார்க்க வேண்டும் என்றால் இராணுவ முகாம்களைத்தான் முதலில் பார்க்க வேண்டியுள்ளது.

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த மாவட்டங்கள் என்றால் திருகோணமலை மாவட்டமும், முல்லைத்தீவு மாவட்டமும் தான்.

எமது தமிழ் மக்களின் அரசியல் அபிலாகைளான இணைந்த வடக்கு, கிழக்கு என்பது நிச்சயமாகச் சாத்தியமாக வேண்டும். அப்படிச் சாத்தியமாக வேண்டுமாக இருந்தால் திருகோணமலை மாவட்டமும், முல்லைத்தீவு மாவட்டமும் தமிழர்களுடைய கைகளிலே மிகவும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் – என்றார்.

# வடக்கு கிழக்கு மோடியிடம் அல்ல இந்தியாவின் கையில்கூட இல்லை

## இப்படிச் சொல்கிறார் கருணாகரம் எம்.பி.




வடக்கு கிழக்கு மோடியின் கையில் அல்ல, இந்தியாவின் கையில்கூட இல்லை. வடகிழக்கு என்பது தமிழர்களின் தாயகம். அது எங்களது சொத்து. அது தமிழ் பேசும் மக்களது தாயகம். எங்களது கைகளிலேயேதான் அது இருக்கின்றது.

இவ்வாறு தெரிவித்தார் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம்.

அண்மையில் இலங்கைக்கு வந்து திரும்பியிருந்த இந்திய ஆளும் கட்சியான பாரதிய ஜனதாவின் தமிழ்நாடு தலைவர் கு.அண்ணாமலை, இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்கள் மோடியை நம்பி அவரது கைகளிலேயே இருக்கின்றது என்று தெரிவித்திருந்தார் என்று தமிழநாட்டு ஊடகங்களில் செய்தி வெளியாகி இருந்தது. அது தொடர்பில் மட்டக்களப்பில் நேற்றுச் செய்தியாளர்களை சந்தித்த கருணாகரம் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இலங்கையில் மாறி மாறி ஆட்சியிருந்தவர்கள் தமிழ் பேசும் மக்களை இரண்டாம் தரக் குடிமக்களாகவே நடத்தி வந்திருக்கிறார்கள். பிரிட்டிாரின் பிடியிலிருந்து இலங்கை விடுபட்ட காலத்திலிருந்து தமிழ் மக்கள் பல வழிகளிலும் தாக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் இருக்கின்றார்கள்.

பல இனக் கலவரங்கள் திட்டமிட்டு நிகழ்த்தப்பட்டிருக்கின்றன. 58, 78, 83 என்று பயங்கரமான இனக் கலவரங்கள், தமிழர் அழிப்பு நடவடிக்கைகள் இடம் பெற்றிருக்கின்றன. 1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற மோசமான தமிழர் அழிப்புக்கு பின்பு இந்தியா நேரடியாக தமிழர் பிரச்சினையில் தலையிட்டிருந்தது.

அந்தக் காலகட்டத்தில் இந்தியப் பிரமராக இருந்தவரான இந்திரா காந்தி அம்மையார் நேரடியாக இலங்கைப் பிரச்சனைகளில் தலையிட்டு தமிழர்கள் ஒரு தீர்வை, தனி நாட்டை பெற்றுக்கொள்வதற்காக எங்களுக்கெல்லாம் பேராதரவு தந்திருந்தார். ஆனால் இறுதியிலே இலங்கை இந்திய ஒப்பந்தம் மூலமாக அவருடைய புத்திரன் ராஜீவ் காந்தி இந்தப் பிரச்சினைக்குள் தலையிட்டார். ஜே ஆர் உடன் இணைந்து இலங்கை – இந்திய ஒப்பந்தத்தை ஏற்படுத்தி 13ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கையின் அரசமைப்பிலே உள்வாங்கி, மாகாண சபை முறைமையைக் கொண்டு வந்திருந்தார்.

அந்த மாகாண சபை முறைமை ஊடாக பகிரப்பட்ட அதிகாரங்கள்கூட முழுமையாக வழங்கப்படாமல் இன்று வரைக்கும் தமிழ் மக்கள் அடக்கி ஒடுக்கப்பட்டு வருகிறார்கள். அதேநேரத்தில் இலங்கை அரசும் கடந்த காலங்களிலே இந்தியாவிடம் இருந்து பல வழிகளிலும் விலகியே செயற்பட்டு வந்தது.

ஜே.வி.பியின் போர்காலமாக இருந்தாலும் சரி, தமிழீழ விடுதலைப் புலிகளுடைய போர்க் காலமாக இருந்தாலும் சரி, பொருளாதார சூழ்நிலையாக இருந்தாலும் சரி இந்தியாவிடமிருந்து உதவிகளைப் பெற்றுக்கொண்டாலும் இலங்கை சீனாவின் பக்கம் சாய்ந்து செல்கின்ற காரணத்தினால் மோடி இந்திய அரசு வடக்கு கிழக்கு மக்கள் மீது அக்கறை கொண்டிருக்கலாம்.

அந்த அக்கறை மோடியின் கையில் வடகிழக்கில் இருக்கின்றது என்று அர்த்தப்படுத்திவிடாது. அந்த அக்கறை உண்மையாக நேர்மையாக இருந்தால், தமிழ் மக்கள் வடகிழக்கிலே சுதந்திரமாக சுய நிர்ணய உரிமையுடன் வாழ வழிவகை செய்யப்படவேண்டும். அப்படி நடந்தால் நன்றாகத்தான் இருக்கும் – என்றார்.



# புதையல் தோண்ட முயன்ற பிக்கு உட்பட எழுவர் கைது!

கலேபிந்துன்வேவ பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் புதையல் தோண்டுவதற்கு முயன்ற பிக்கு ஒருவர் உள்ளிட்ட 7 பேர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக கலேபிந்துன்வேவ பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் கருவலகஸ்வெள பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் புதையல் தோண்டுவதற்கு முயற்சித்த 7 பேரும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இதன்போது நிட்டம்புவ விகாரையின் 40 வயதுடைய பிக்கு ஒருவர் உள்ளிட்ட 22, 26, 28, 45 மற்றும் 48 வயதுடையவர்களே கைதானவர்கள் எனவும் இவர்கள் கெடலாவ, மெகொடவெள, நிட்டம்புவ மற்றும் பஸ்யால பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் கஹடகஸ்திகிலிய நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார்கள். சம்பவம் தொடர்பில் கலேபிந்துன்வேவ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# போர்ப் பாணியில் தயாரான படையினர்.....























கொழும்பு, பெப். 21

ஐக்கிய மக்கள் சக்தியால் கொழும்பில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போராட்டத்தின்போது பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் தடுப்பு நடவடிக்கைகளை ஒரு போர்காலப் பாணியில் மேற்கொண்டனர். அந்தக் காட்சிகளை இங்கு பார்க்கலாம். கொட்டும் மழைக்கும் மத்தியில் படையினரின் இந்த ஏற்பாடுகள் பார்ப்பவர்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தின.

## தேர்தலை மார்ச் 9 ....

(02ஆம் பக்கத் தொடர்ச்ச)
அரச அச்சகம், பொலிஸ் மா அதிபர், இலங்கை மின்சார சபையின் தலைவர் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் ஆகியோர் தேர்தலுக்குத் தேவையான வசதிகளை செய்துகொடுக்கவில்லை.

இந்தக் காரணங்களால் தேர்தலைத் திட்டமிட்டவாறு மார்ச் 9ஆம் திகதி நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று தேர்தல்கள் ஆணைக்குழு ஆவண ஆதாரங்களுடன் உயர்நீதிமன்றத்துக்கு அறிவித்துள்ளது.

## நாடாளுமன்றத்தைக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அரசமைப்பின் 70 (1) (அ) உறுப்புரையின் பிரகாரம், தற்போதைய நாடாளுமன்றம் முதல் முறையாக கூடுவதற்கு நியமிக்கப்பட்ட திகதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் 6 மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதியில், நாடாளுமன்றத் தீர்மானம் மூலம் கோராத பட்சத்தில் ஜனாதிபதியால் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியாது.

நாட்டின் ஏழாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நாடாளுமன்றத் தேர்தலுக்கு அழைப்பு விடுத்தார். எனினும், கொரோனா தொற்றுநோய் காரணமாக, 2020 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி குறித்த தேர்தல் நடைபெற்றது.

இதன்படி, ஏழாவது நிறைவேற்று ஜனாதிபதியான கோட்டாபாய ராஜபக்ஷவின் தலைமையில், ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் ஆரம்ப அமர்வு அந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 20 ஆம் திகதி கூட்டப்பட்டது.

குறித்த முதல் அமர்வு இடம்பெற்று நேற்று (20) நள்ளிரவுடன் இரண்டு வருடங்களும் ஆறு மாதங்களும் நிறைவடைந்துள்ளன.

எனவே, கோட்டாபய ராஜபக்ஷவின் பதவி விலகலின் பின்னர் அரசமைப்பு ரீதியாக ஜனாதிபதியான ரணில் விக்கிரமசிங்கவுக்கு, அரசமைப்பின் 70 (1) (அ) உறுப்புரையின் பிரகாரம் நாடாளுமன்றத்தைக் கலைக்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## திருத்தம் 13தான் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியாவின் ஆளும் கட்சியான பாரதிய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு தலைவர் அண்ணாமலை இங்கு வந்து சென்றபோது சில விடயங்களை ஊடகங்ளுக்கு தெரிவித்திருக்கிறார்.

ஈழத்தமிழர்பிரச்சினைக்கு, இலங்கை அரசமைப்பின் 13ஆம் திருத்தம்தான் தீர்வு, அதைத்தான் இங்கே இருக்கிற மக்களும் வலியுறுத்தி இருக்கின்றனர் என்ற கருத்துருவாக்கத்தை செய்யும் வகையில் அவர் பேசி இருக்கின்றார்.

அவருடைய இந்தக் கருத்தை முற்று முழுதாக நாங்கள் நிராகரிப்பது மட்டுமல்லாமல் வன்மையாகக் கண்டிக்கிறோம். தமிழீழ மக்கள் மிகத் தெளிவாக 1987ஆம் ஆண்டே இந்த 13ஆம் திருத்தம் ஒற்றையாட்சிக்குள் இருப்பதாகக் கருதி அதனை அடியோடு நிராகரித்துவிட்டார்கள்.

13ஆம் திருத்தம்தான் தீர்வு என்ற விடயத்தை வைத்து இந்தியாவின் பொம்மைகள் அல்லது எடுபிடிகள் அல்லது கூலிகள் இங்கு அரசியலில் செயற்பட்டுவருகின்றபோதுகூட, 13தான் தீர்வு என்று சொல்லி மக்களின் ஆதரவைப் முடியாத நிலைமைதான் இப்போதும் இருக்கிறது. அதுதான் யதார்த்தம்.

13 தீர்வல்ல, ஆனால் அரசமைப்பில் இருப்பதைத்தான் நாங்கள் கேட்கிறோம். தீர்வென்றால் அது சமஷ்டி, சுயநிர்ணயம்தான் என்று பேசி இங்கிருப்பவர்களும் 13ஜ தமிழ் மக்களிடம் திணிக்கப் பார்க்கின்றனர். ஏனென்றால் தேர்தலின்போது 13ஜ உச்சரித்தால் மக்கள் ஆதரவு கிடைக்காது என்பது அவர்களுக்கு நிச்சயம் தெரியும்.

அது தான் இங்கு யதார்த்தமாக இருக்கும்போது அண்ணாமலை, தூக்கத்தில் இருந்து எழுந்தவர்போன்று 13ஆவது திருத்தம்தான் தீர்வு என்று சொல்லுவதை ஒரு போதிலும் ஏற்க முடியாது.

அதிலும் அவர் இங்கு வந்து சந்தித்த அனைவரும் இந்திய நாட்டின் முகவர்கள்தான். அவர் எந்தவொரு இடத்திலும் பொது மக்களைச் சந்தித்தார் என்று எவரும் அறியவில்லை.

தாங்களே தங்கள் முகவர்களுக்கு 13 ஜ கேளுங்கள் என்று சொல்லிவிட்டு இங்கு அதே முகவர்களை சந்திக்கும் போது அவர்களும் 13 ஜ கேட்க, ஏதோ ஈழத்தமிழர்கள் 13ஜத்தான் கேட்கிறார்கள் என்று கூறுவது ஒரு பொருத்தமான கருத்து அல்ல.

நாங்கள் பாதிக்கப்பட்ட இனம். போருக்கு பிறகும் பாதிக்கபடுகிற இனம். இவை அனைத்திற்கும் காரணம் ஒற்றையாட்சிக்குள் இருக்கக்கூடிய கட்டமைப்புக்கள்தான். 13ஆவது திருத்தம் 36 வருடங்களாக இருக்கின்றது. ஆனால், தமிழினம் அழிக்கப்படும் போதும் ஓர் அங்குலத்தையோ ஒரு துளி குருதியையோகூடக் காப்பாற்ற முடியாத கட்டமைப்பைக்குள் இருக்கிறது. அதனை ஒருநாளும் ஈழத்தமிழர்கள் ஏற்கப் போவதில்லை. அதனை அடியோடு நிராகரிக்கிறார்கள்.

அதேநேரம் இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் எத்தனையோ குறைபாடு இருந்தும்கூட, தமிழர்கள் அதில் ஒரு பங்காளிகளாக இல்லாமல் இருந்தாலும்கூட, ஈழத் தமிழர்கள் அந்த ஒப்பந்தத்தை நிராகரிக்காமல் இருப்பதற்கு பிரதான காரணம் இந்தியாவின் நலன்கள் சார்ந்த விடயங்கள் அந்த ஒப்பந்தத்திலுள்ள இணைப்புக்களில் சேர்க்கப்பட்டிருப்பதுதான்.

இந்தியாவின் நலன்கள் பாதிக்கப்படக்கூடாது, அவ்வாறு பாதிப்பதற்கு நாங்கள் உடந்தையாக இருக்கக்கூடாது என்ற ஒரே ஒரு காரணத்திற்காகத்தான் இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நாங்கள் நிராகரிக்காமல் இருக்கின்றோம். அந்த ஒப்பந்தத்தை வைத்துக் கொண்டு 13ஆவதுதான் தீர்வு என்று திணிக்க முயற்சிக்கப்படுமாக இருந்தால் இந்திய இலங்கை ஒப்பந்தத்தையே கேள்விக்குட்படுத்த வேண்டியதொரு நிலை வரும். அந்த இடத்திற்கு அண்ணாமலை போன்றவர்கள் எங்களைத் தள்ளக்கூடாது.

இந்தியாவின் நலன்களைப் பாதுகாப்பதே ஈழத்தபிழர்களுடைய விருப்பம். அதனால்தான் நாங்கள் எந்தவொரு கட்டத்திலும் இந்தியாவின் நலன்களுக்கு விரோதமான எவரும் வடக்கு – கிழக்கில் காலூன்றவிடாமல் எதிர்க்கின்றோம். இந்தியா அதைப் புரிந்துகொள்வேண்டும்.

ஈழத் தமிழர்கள் இந்திய நலன்களைப் புரிந்துகொண்டு, அதற்கு இயைந்து நடக்கிறார்கள் என்பதற்காக ஒற்றையாட்சிக்குள் எங்களை முடக்குவதற்கு அல்லது ஒற்றையாட்சிக் கட்டமைப்புக்களை எம்மை ஏற்றுக் கொள்ள வைப்பதற்கு முற்பட்டால் அதனை எதிர்ப்போம்– என்றார்.

## கோட்டாபய .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார். தெற்கு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'கோட்டாபய ராஜபக்சவின் வேண்டுகோளின் பிரகாரம் சஜித் பிரேமதாஸ பிரதமர் பதவியை பாரமேற்று ஏன் அவரது திறமையைக் காட்டவில்லை?' என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கும் போது,

மக்கள் ஆணையின் ஊடாக வருகின்ற அதிகாரத்தைத்தான் சஜித் பிரேமதாஸ பாரமேற்பார் என்று இருந்தார். கோட்டாபய ராஜபக்ஷ அப்படிக் கூப்பிட்டு பிரதமர் பதவியைக் கொடுக்கத் தேவை இல்லை.

கோட்டாபய நாடாளுமன்றத்தைக் கலைத்திருக்க வேண்டும்; அவர் ஜனாதிபதி பதவியை விட்டு நாட்டை விட்டு ஓடியிருக்கத் தேவையில்லை.

விசேட தீர்மானம் மூலம் நாடாளுமன்றத் தேர்தலை நடத்தி அதில் சஜித் அணி அதிக ஆசனங்களைப் பெற்றிருந்தால் ஆட்சியைக் கொண்டு நடத்தி இருப்பார்.

அப்படி இல்லாமல் கோட்டாபயவின் தலைமைத்துவத்தின் கீழ் எப்படிப் பிரதமராக இருப்பது? – என்றார்.

## 'மொட்டு' ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

'உங்களின் தேர்தல் பிரசாரத்தில் அதிகமாக ஜே.வி.பியையே தாக்குகிறீர்கள். ஏன் அப்படி?' என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கும் போது,

அதற்குக் காரணம் உண்டு. எங்களுக்கு ஜே.வி.பி.யுடன் தனிப்பட்ட பிரச்சினை எதுவும் கிடையாது.

தேர்தலின் போது பிரதான கட்சியுடன்தான் மோதுவது வழக்கம். பிரதான கட்சியான மொட்டுக் கட்சி கடுமையாக வீழ்ந்துவிட்டது. அதனால், நாம் மோதும் ஒரு கட்சியாக ஜே.வி.பி. மாறியுள்ளது.

ஜே.வி.பி.யினரும் தேர்தல் மேடைகளில் எங்களையே தாக்கிப் பேசுகின்றனர். இதனால் நாங்கள் அதற்குப் பதில் வழங்குகின்றோம்.

இது எமது நாட்டின் தேர்தல் கலாசாரமாக மாறிவிட்டது. மேடைகளில் விவாதங்கள் புரிவதும், ஒரு கட்சியின் கொள்கையை இன்னொரு கட்சி விமர்சிப்பதும் வழமையான ஒன்று.

இந்த அடிப்படையில்தான் இப்போது ஜே.வி.பி.யும் ஐக்கிய மக்கள் சக்தியும் மோதிக்கொள்கின்றன – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்
076 443 8622



Jaffna EDU Expo 2023

# யாழில்

## உயர்கல்வி தொடர்பான கல்விக்கண்காட்சி

நீங்கள் உயர்தரத்தை நிறைவு செய்தவரா?



**25.02.2023**
**9.00am - 5.00pm**

### உயர்கல்விக்கான சரியான கல்வித்துறையை தெரிவு செய்து கொள்ளுங்கள்.

- இலங்கையில் உள்ள அனைத்து முன்னணி உயர்கல்வி நிறுவனங்களில் உள்ள ஒவ்வொரு பாட துறைகள் பற்றிய அறிமுகம் வழங்கப்படும்.
- முன்னணி உயர்கல்வி நிறுவனங்களில் உள்ள Bachelor, HND, Top-up, Diploma, NVQ போன்ற படிப்புக்களுக்கான திட்டங்களை அறிந்து கொள்ள முடியும்.
- இக் கல்விக்கண்காட்சிக்கு வருகைதருவதால் உங்கள் வாழ்க்கைக்கு உகந்த பாட நெறியை தெரிவு செய்து கொள்ளலாம்.
- இலங்கையில் உள்ள முன்னணி அரச மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களை ஒரே இடத்தில் சந்திப்பதற்கான வாய்ப்பு.
- உடனடி அனுமதியுடன் புலமைப்பரிசில்கள்.

அனுமதி இலவசம்

வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்

மேலதிக விபரங்களுக்கு 076 2723 203

Platinum Sponsor: IDM | Media Partner: காலைக்கதிர் | Community Partner | Tech Partner: LIZRIS | Organized by: TEACHME

www.teachme.lk/eduexpo-2023

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பக்கங்கள்: 08

காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 08 திங்கட்கிழமை 20.02.2023 கதிர் 355

## தேங்காய் பறிக்கச் சென்றவர் தவறி வீழ்ந்து பரிதாபச் சாவு

திருகோணமலை மாவட்டம், புல்மோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் தேங்காய் பறிப்பதற்காகச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் மரத்திலிருந்து விழுந்து உயிரிழந்துள்ளார்.

இந்தப் பரிதாப சம்பவம் ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். 2

# ‘தேர்தலை நடத்து’ கொழும்பில் பேரணி



## போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் நீர்த்தாரைப் பிரயோகம்!

### கண்ணீர்ப்புகைக் குண்டும் வீச்சு

உள்ளூராட்சித் தேர்தலை திட்டமிட்டபடி மார்ச் 9ஆம் திகதி நடத்த வலியுறுத்தி ஐக்கிய மக்கள் சக்தியால் கொழும்பில் இன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பேரணியால் கொழும்பில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. 8

### வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி நடந்த

## பேரணியில் பங்கேற்ற 7 பேருக்கும் பிணை



-எஸ்.நிதர்ன்-

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்ட வடக்கிலிருந்து கிழக்கு நோக்கிய (ஹி2சி) பேரணியில் கலந்து கொண்ட ஏழு 2

## தலைவர் காட்டிய சின்னமே தமிழரசின் வீட்டுச் சின்னம்

### அதற்கே தமிழ் மக்கள் வாக்களிக்க வேண்டும் என்கிறார் சாணக்கியன்



தலைவர் காட்டிய சின்னமே வீட்டுச் சின்னம். எனவே, தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்குவாக்களிக்க வேண்டும்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றஉறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

இலங்கைத்தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு பிரதேச சபைக்கான வேட்பாளர் 2

## பஸ் மோதிய கார் ரயிலில் மோதியது

கிளிநொச்சி அறிவியல் நகர் பகுதியில் இன்று காலை கார் - பஸ் - தொடருந்து விபத்தில் மூவர் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கிச் சென்றுகொண்டிருந்த தொடருந்து அறிவியல் நகரைக் கடக்க இருக்கையில் வீதிக் கடவையில் காத்திருந்த கார் மீது பின்னால் வந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் கட்டுப்பாட்டை இழந்து மோதியது. இதனால் முன்னோக்கித் தள்ளப்பட்ட கார் தொடருந்துத் தடத்திற்குள் புகுந்தபோது தொடருந்து அதனை இடித்துத் தள்ளி முன்னேறியது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

காரை மோதிய பஸ் அருகிலிருந்த மின் கம்பத்துடன் மோதி நின்றது. காயமடைந்த மூவரும் கிளிநொச்சி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.



## மகாசங்கத்தினரின் கோரிக்கைகளுக்கு ஜனாதிபதி இணக்கம்



பாலி மற்றும் பௌத்த பல்கலைகழகத்தை தகுதிவாய்ந்த அதிகார சபையாக நியமித்து அதனை சர்வதேச பௌத்த கற்கை மையமாக மாற்றுவதாக 2

## துப்பாக்கி திருடிய சந்தேகத்தில் 2 படையினர் கைது

படைத் தலைமையகத்தில் இருந்து துப்பாக்கி மற்றும் அதற்குரிய குண்டுகளைத் திருடினார்கள் என்கிற சந்தேகத்தில்படையினர் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். 2

## கடலில் மிதந்த 100 கி. கஞ்சா

### கடற்படையினரால் மீட்பு



(ந.லோகதயாளன்)

இந்தியாவில் இருந்து கடத்தி வரப்பட்டதாக நம்பப்படும் 100 கிலோ கஞ்சா நேற்று கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. அநாதரவாக 2



## தேர்தலை நடத்த வலியுறுத்தி கந்தளாயில் ஆர்ப்பாட்டம்

அறிவிக்கப்பட்டபடி மார்ச் 9ஆம் திகதி தேர்தலை நடத்த வலியுறுத்தி கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், கந்தளாயில் ஞாயிற்றுக்கிழமை ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

தேர்தலை ஒத்திவைப்பது ஜனநாயகத்தை தடுக்கும் ஆட்சியாளர்களின் 2

## மகா சங்கத்தி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கண்டி ஜனாதிபதி மாளிகையில் நேற்று (19) மல்வத்து மற்றும் அஸ்கிரிய பீட மகா சங்கத்தினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

பிரிவேனா கல்வியின் தரத்தை உயர்த்துவது இன்றியமையாதது என மகா சங்கத்தினரால் முன்வைக்கப்பட்ட யோசனை நிச்சயமாக நடைமுறைப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

நாட்டில் பௌத்த மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் 2023 ஆம் ஆண்டு வெசாக் பண்டிகையை அரச தலையீட்டுடன் நடத்துமாறு மல்வத்து அஸ்கிரி மகா சங்க உறுப்பினர்கள் விடுத்த கோரிக்கையையும் ஜனாதிபதி ஏற்றுக்கொண்டார்.

பௌத்த பிக்குமார் மற்றும் விகாரைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டு சாத்தியமான அனைத்து தீர்வுகளும் வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

## தேங்காய்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கோபாலபுரம்-நிலாவெளி பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான தம்பி என்றழைக்கப்படும் சௌந்தரராஜன் நிரோஸ் குமார் (வயது 41) என்பவரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் புல்மோட்டை தள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டது.

புல்மோட்டை பொலிஸாரின் விசாரணைகளின் பின்னர் சடலம் சட்ட வைத்திய பரிசோதனைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படும் என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் புல்மோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## தேர்தலை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கோழைத்தனமான செயல் என்று கண்டித்த இந்த ஆர்ப்பாட்டம், தேசிய மக்கள் சக்தியினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கந்தளாய் பஸ் தரிப்பு நிலையத்திற்கு முன்பாக பதாகைகளுடன் கூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் அரசுக்கு எதிராகக் குரல் எழுப்பினர். பல டசின்கணக்கானவர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

தேர்தலை நிறுத்தி ஜனநாயகத்தைப் புதைக்கின்ற ஆட்சியாளர்களின் கோழைத்தனத்தைத் தோற்கடிப்போம் என்று அவர்கள் முழக்கமிட்டனர்.

## தலைவர்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) அறிமுகக் கூட்டம் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் நேற்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே இரா.சாணக்கியன் எம்.பி. மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நடைபெறவுள்ள இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலானது தமிழ் மக்களுக்கு மிகவும் முக்கியமானதொரு தேர்தல்.

தமிழ் மக்கள் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும். இந்தச் சின்னம் தலைவர் காட்டிய சின்னம், உலக நாடுகளுக்கு நன்கு தெரிந்த சின்னம். ஆகவே, தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும் - என்றார்.

## பேரணியில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பேருக்கு எதிராக யாழ்ப்பாணம் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளிட்ட சந்தேகநபர்கள் 7 பேருக்கும் யாழ் நீதவான் நீதிமன்றினால் இன்று பிணை வழங்கப்பட்டது.

இலங்கையின் 75 ஆவது சுதந்திர தினத்தை கரி நாளாக அறிவித்து யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் வடக்கிலிருந்து கிழக்கு நோக்கி பேரணி நான்கு நாள்கள் நடத்தப்பட்டது.

இந்தப் பேரணியில் கலந்துகொண்டமை மற்றும் பொலிஸாருக்கு இடையூறு விளைவித்தமை என்ற குற்றச்சாட்டில் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன், நல்லூர் சிவகுரு ஆதீன தலைவர் வேலன் சுவாமிகள் உள்ளிட்ட 7 பேர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

சந்தேகநபர்கள் ஏழு பேரையும் நீதிமன்றின் முன்னிலையாகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம் நீதிவான் மன்றில் வழக்கு இன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் ஏழு பேருக்கும் பிணை வழங்கிய நீதிமன்றம் எதிர்வரும் மே மாதம் 8 திகதிக்கு வழக்கை ஒத்தி வைத்தது. இந்த வழக்கில் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா மற்றும் மூத்த சட்டத்தரணி என்.சிறீக்காந்தா ஆகியோர் எதிராளிகள் சார்பில் முன்னிலையாகி இருந்தனர்.

## கடலில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கடலில் மிதந்து கொண்டிருந்த பொதியில் இருந்து இவை மீட்கப்பட்டன.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை கடல்லில் சுற்றுக்காவலில் ஈடுபட்ட கடற்படையினர் ஓர் பொதி கடலில் மிதப்பதனை அவதானித்தனர். அதனை எடுத்துச் சோதித்தனர்.

அந்தப் பொதிக்குள் 100 கிலோ கஞ்சா இருந்ததாக அவர்கள் தெரிவித்தனர்.

## துப்பாக்கி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) புத்தளத்தில் உள்ள 58 ஆவது படைத் தலைமையகத்திலிருந்து ரி-56 தானியங்கி துப்பாக்கி மற்றும் அதற்கான குண்டுகளை இவர்கள் திருடினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. அதே முகாமில் முகாமில் கடமையாற்றும் இரு படையினர் கைது செய்யப்பட்டனர்.

திருடப்பட்ட துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை வைத்திருந்தார் என்று கூறப்படும் அநுராதபுரத்தைச் சேர்ந்த கோடீஸ்வர வர்த்தகர் ஒருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வர்த்தகரின் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ரி-56 தானியங்கி துப்பாக்கி, தோட்டாக்கள் என்பனவும் மீட்கப்பட்டன.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622



40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கை மற்றும் நாடளாவியரீதியில் 400க்கும் அதிகமான முகவர்கள்
douglas & sons (pvt) ltd
290/25, Sri Sangharaja Mawatha, Colombo 10
0777755598 | 0701630209 | 0772211211
www.dslsolarenergy.com
MARKETED BY DSL, POWERED BY OKAYA & MICROTEK
BOC Sampath Bank Commercial Bank HNB

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## எவ்வளவு காலத்திற்குத்தான் இழுத்தடிப்பீர்கள்?

அதிகாரப் பகிர்வு விடயத்தில் அவசரப்படவேண்டாம் என்று தமிழ் மக்களுக்கு அறிவுரை சொல்லியிருக்கிறார் ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க. அவரது கருத்து வேடிக்கையாகவும் வேதனையாகவும் இருக்கிறது. அவர் மட்டுமல்ல தெற்கில் உள்ள நூற்றுக்குத் தொண்ணூறு வீதமான அரசியல்வாதிகள் தீர்வு பற்றி பேசப்படும் ஒவ்வொரு தடவைகளும் இதேபோன்றுதான் கருத்துச் சொல்லித் தட்டிகழிக்கிறார்கள். அவர்களின் வார்த்தைகள் வேண்டுமானால் வேறுபடலாம்; ஆனால் உட்பொருள் ஒன்றுதான்.

“ஒரே இரவில் தீர்த்துவிடமுடியாது”, “4 தசாப்த பிரச்சினையை உடனே தீர்த்துவிடமுடியாது”, “முதலில் கிடைப்பதைப் பெற்றுக்கொள்ளவேண்டும்”, “சிங்கள மக்கள் சமஷ்டியை ஏற்க இன்னும் தயாரில்லை” என்று வார்த்தைகள் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொருவரின் வாய்களில் இருந்தும் மாறுபடலாமே தவிர, அவர்கள் எல்லோரும் சொல்வதெல்லாம் தீர்வைத் தரமுடியாது என்கிற ஒரே பதில்தான். அதை நாசூக்காகச் சொல்கிறார்கள்.

அத்தநாயக்கவும் அதையே இப்போது சொல்லியிருக்கிறார்.

“ரணில் விக்கிரமசிங்க அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பொதுவேட்பாளராகப் போட்டியிடுவதற்கு திட்டமிட்டுள்ளார். வடக்கு, கிழக்கு தமிழ் வாக்குகளை அபகரிப்பதற்கு அதிகாரப் பகிர்வு என்ற துருப்புச் சீட்டை அவர் பயன்படுத்துகின்றார் போல் உள்ளது.

அவர் மறைமுகமான அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில்தான் வேலை செய்கின்றார். ஆகவே, அரசியல் தீர்வு விடயத்தில் – அதிகாரப் பகிர்வு விடயத்தில் அவசரம் காட்ட வேண்டாம் என்றே நாங்கள் சொல்கின்றோம்” என்கிறார் அத்தநாயக்க.

அவர் ஒன்றை மறந்துவிட்டார் தமிழர்கள் ஒரு நூற்றாண்டாக 100 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரு தீர்வுக்காகக் காத்திருக்கிறார்கள். சுதந்திரத்திற்கு முன்பிருந்தே தமது இறைமையை மீட்பதற்கான தீர்வு குறித்த கோரிக்கைகள் எழுந்துவிட்டன. டொனமூர், சோல்பெரி யாப்புகளின் போதிருந்தே தமிழர்கள் தீர்வைக் கேட்கிறார்கள். பிரிட்டிஷார் இலங்கையை விட்டு வெளியேறிய பின்னர் கடந்த 75 வருடங்களாக ஒரு தீர்வை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.

ஆனால், பௌத்த சிங்கள ஆட்சிகள் ஒவ்வொரு தடவையும் தமிழர்களை ஏமாற்றிக் காலத்தைக் கடத்தியே வந்திருக்கின்றன. தமிழர்களும் சாமதான தண்ட வழிகளில் எல்லாம் போராடிப் பார்த்துவிட்டார்கள், ஆனால் தீர்வுதான் கிட்டவில்லை. ஆக்கப் பொறுத்தவனுக்கு ஆறப் பொறுக்கச் சொல்லலாம். ஆனால் இங்கோ தமிழர்கள் அடுப்புக்குப் பக்கத்தில் காவலிருக்கிறார்கள் அடுப்பில் பானைகூட வைக்கப்படவில்லை. இந்த நிலையில் இன்னும் எத்தனை காலம்தான் அவசரப்படவேண்டாம் என்று கூறியே காலத்தை இழுத்தடிப்பீர்கள்?

# நாணய நிதியத்தின் நிபந்தனையாலேயே கடும்பிடி: டிசெம்பருக்குள் எல்லாம் தளரும்

## இப்படிச் சொல்கிறார் ருவன் விஜேவர்த்தன



சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமையவே வரி அதிகரிப்பு உட்பட சில கடுமையான தீர்மானங்களை எடுக்கவேண்டி ஏற்பட்டது. என்றாலும் டிசெம்பர் மாதத்துக்குள் எடுக்கப்பட்ட கடுமையான தீர்மானங்களை இலகுபடுத்தி மக்களுக்கு நிவாரணம் வழங்கு– வதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் என ஐக்கிய தேசிய கட்சி பிரதித் தலைவர் ருவன் விஜேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பு மாளிகாவத்தை பிரதேசத்தில் இடம்பெற்ற உள்ளூராட்சிமன்ற தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

ஜனாதிபதியும் நாங்களும் மக்களுக்கு ஏதாவது சேவை ஒன்றை மேற்கொள்ளவே முயற்சிக்கிறோம். அவ்வாறு இல்லாமல் அரசியல் செய்வதில் பயனில்லை. அதனால் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வுகாண சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெற்றுக்கொள்ள நாங்கள் தீர்மானித்திருக்கிறோம்.

அவர்கள் எங்களுக்கு நிதி உதவி செய்வதாக இருந்தால், நாட்டின் வங்குரோத்து நிலைமையை அறிந்துகொண்டு எங்களுக்கு நிபந்தனைகளை விதிப்பார்கள்.

அந்த நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டு எமக்கு பணியாற்ற வேண்டி ஏற்படுகிறது.

நாட்டின் திறைசேரியில் பணம் இல்லை. தேர்தலை நடத்து– வதற்கு கூட எங்களிடம் பணம் இல்லை. இவ்வாறான நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் மூலம் பணம் பெற்றுக்கொள்வதாக இருந்தால் அவர்களின் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்ள வேண்டி ஏற்படுகிறது.

அவர்களின் நிபந்தனைகளுக்கமையவே வரி அதிகரிக்கவேண்டி ஏற்பட்டிருக்கிறது. அவ்வாறு இல்லாமல் மாற்று வழி எதுவும் எங்களிடம் இல்லை. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பணம் பெற்றுக்கொள்வதாக இருந்ததால், அவர்கள் தெரிவிக்கும் கஷ்டமான தீர்மானங்களை நிறைவேற்ற வேண்டி ஏற்படுகிறது.

மேலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அண்மைக்காலத்தில் எடுத்த சில தீர்மானங்கள் மிகவும் கடுமையான தீர்மானங்களாகும். சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அமையவே அவ்வாறான தீர்மானங்களை எடுக்கவேண்டி ஏற்பட்டது.

இவ்வாறு கஷ்டமான தீர்மானங்களை எடுப்பதற்கு எதிர்க்கட்சியில் இன்றும் யாரும் இல்லை. அவ்வாறான தீர்மானம் எடுக்கும் அளவுக்கு அவர்களுக்கு முதுகெலும்பு இல்லை. முதுகெலும்பு இருக்கும் தலைவர்களுக்கே இவ்வாறான கடுமையான தீர்மானங்களை எடுக்க முடியும்.

என்றாலும் தற்போது எடுக்கப்பட்டிருக்கும் கடுமையான தீர்மானங்களுக்கு இன்னும் சில மாதங்களில், டிசெம்பராகும்போது எடுக்கப்பட்ட தீர்மானங்களை இலகுபடுத்தி மக்களுக்கு நிவாரணம் வழங்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

அப்போது ஜனாதிபதி எடுத்த தீர்மானத்தை மக்கள் ஏற்றுக்கொள்வார்கள். – என்றார்

# கோட்டாபயவின் கதியே ரணிலுக்கும் ஏற்படும்!

## அடித்துக் கூறுகிறார் குமார வெல்கம



ஸ்ரீ லங்கா பொது ஜன பெரமுனவின் மக்களாணை இல்லாத காரணத்தால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உள்ளூராட்சிமன்றத் தேர்தலை பிற்போட முயற்சிக்கிறார். பொருளாதார பாதிப்பு என குறிப்பிட்டுக் கொண்டு ஜனநாயகத்துக்கு எதிராக செயற்பட்டால் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு ஏற்பட்ட கதியே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் ஏற்படும் என நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

மதுகம நகரில் இடம்பெற்ற நவ லங்கா சுதந்திர கட்சியின் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ள பின்னணியில் நான் அரசியலில் இருந்து ஓய்வுபெறப் போவதாக ஒரு தரப்பினர் குறிப்பிட்டுக் கொள்கிறார்கள். 2022 மே மாதம் 09 ஆம் திகதி வன்முறை சம்பவத்தின் போது கடுமையான தாக்குதலுக்கு உள்ளானேன். பாரிய போரட்டத்துக்கு மத்தியில் உயிர் பிழைத்தேன். ஆகவே அரசியலில் இருந்து ஓய்வுப் பெற வேண்டிய தேவை தற்போது இல்லை. நாட்டுக்காகர் தொடர்ந்து அரசியலில் ஈடுபடுவேன்.

225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் திருடர்கள் என்று மக்கள் விமர்சிக்கும் நாட்டில் வாழ்கிறோம், தவறுகளைத் திருத்திக் கொண்டு இளம் தலைமுறையினருக்கு முன்னுரிமை வழங்கி சிறந்த மாற்றத்தை நோக்கிப் பயணிக்க வேண்டும். உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடத்தமாட்டார் என்று ஆரம்பத்தில் குறிப்பிட்டேன்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கு மக்கள் மத்தியில் செல்ல முடியாது. இதனால் உள்ளூராட்சிமன் றத் தேர்தல் பிற்போடப்படும்.

பொதுஜன பெரமுன வின் ஜனாதிபதிவேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ அரசியலுக்கு பலவீனமானவர் என்று குறிப்பிட்டேன், அப்போது என்னைக் கடுமையாக சாடினார்கள். இறுதியில் இரண்டரை வருடத்துக்குள் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து பலவீனமான அரச தலைவரான கோட்டாபய ராஜபக்ஷவை விரட்டியடித்தார்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தவறான ஆலோசனைகளுக்கு அமைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனநாயகத்துக்கு எதிராகச் செயற்பட்டால் கோட்டாபய ராஜபக்ஷவிற்கு ஏற்பட்ட கதியே ஜனாதிபதிக்கும் ஏற்படும். பொருளாதாரப் பாதிப்பு உள்ளது என்பதை ஏற்றுக்கொள்கிறோம். பொருளாதாரப் பாதிப்பு என குறிப்பிட்டுக் கொண்டு ஜனநாயகத்துக்கு முரணான செயற்பாடுகளை முன்னெடுக்க இடமளிக்க முடியாது. – என்றார்.

# தபால் சேவையில் ஆளணிப் பற்றாக்குறை 2 ஆயிரம் ஊழியர்கள் அவசரமாக தேவை!

இலங்கை தபால் திணைக்களத்தில் இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் இருப்பதாக பிரதித் தபால்மா அதிபர் ராஜித ரணசிங்ஹ தெரிவித்தார்.

இருப்பினும் அரச சேவையில் ஆள்களை இணைத்துக் கொள்வது நிறுத்தப்பட்டுள்ளதால் அத்தியாவசிய சேவைக்காக அரச சேவையில் உள்ளவர்களை தபால்சேவைக்குள் ஈர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இன்று 218 பேருக்கு பதவி உயர்வு வழங்கி அவர்களுக்கான பயிற்சி நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

உள்ளக ரீதியில் நடத்தப்பட்ட பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைவாக இவர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## உளவு பலூன் விவகாரம்

# சீனாவுக்கு அமெரிக்கா நேரடியாக எச்சரிக்கை



அமெரிக்க வான்வெளியில் சீன உளவு பலூன் பறந்தது போன்று இனி ஒரு சம்பவம் நடைபெறக்கூடாது என சீன அயலுறவு அமைச்சரிடம் அமெரிக்க வெளியுறவு அமைச்சா ஆன்டனி பிளிங்கன் நேரடியாக எச்சரிக்கை விடுத்தார்.

ஜொமனியில் உள்ள மியூனிக் நகரில் சனிக்கிழமை நடைபெற்ற பாதுகாப்பு மாநாட்டின் ஒரு பகுதியாக சீன அயலுறவு அமைச்சா் வாங்யீயை சந்தித்தபோது, இந்த எச்சரிக்கையை பிளிங்கன் விடுத்தார்.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத் துறை செய்தித் தொடாபாளா நெட் பிரைஸ், செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

சீனாவின் உளவு பலூன் அமெரிக்க வான்வெளியில் பறந்தது அமெரிக்காவின் இறையாண்மையை மீறிய செயலாகும்; இதை ஏற்றுக்கொள்ளமுடியாதுஎனஅமைச்சா பிளிங்கன், சீன பிரதிநிதியிடம் நேரடியாக எச்சரிக்கை விடுத்தார்.ஐந்துகண்டங்களைச் சோந்த 40 நாடுகளின் வான்வெளி வழியாக உளவு பலூன் ஊடுருவியுள்ளது. இது போன்ற பொறுப்பற்ற செயல்கள் இனி ஒரு போதும் நடைபெறக் கூடாது எனவும் அவா குறிப்பிட்டார்.

மேலும், உக்ரைன் மீதுகொடூரமானபோரை நடத்திவரும் ரஷ்யாவுக்கு சீனா பொருளாதார உதவிகளை வழங்குவது அந்த நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்க வழிவகுக்கும் எனவும் எச்சரிக்கை விடுத்தார்.

அதேவேளையில், தைவான் நீரிணையில் அமைதியும்,நிலைத்தன்மையும் நிலவவேண்டியதன்முக்கியத்துவத்தைச் சுட்டிக்காட்டிய பிளிங்கன், 'ஒரே சீனா' என்கிற அமெரிக்காவின் கொள்கையில் எந்த மாற்றமும் இல்லை எனவும் தெளிவுபடுத்தினார் நெட் பிரைஸ் தெரிவித்தார்.

முன்னதாக, மியூனிக் மாநாட்டில் பேசிய அமெரிக்க துணை அதிபா கமலா ஹாரிஸும், உக்ரைன்போரில் ரஷ்யாவுக்கு ஆதரவளிக்கும் சீனாவுக்குகண்டனம்தெரிவித்திருந்தார்.

சீனாவின் உளவு பலூன் அமெரிக்க வான்வெளியில் அண்மையில் ஊடுருவி பரபரப்பை ஏற்படுத்தியது. அதிபர் ஜோ பைடனின் உத்தரவுப்படி, இந்த உளவு பலூனை அமெரிக்க போா விமானங்கள் சுட்டு வீழ்த்தின. இந்த விவகாரம் இரு நாடுகளிடையிலான உறவில் மேலும் விரிசலை ஏற்படுத்தியது.

உளவுபலூன்சம்பவத்தை தொடாந்து, கடந்த 5-6ஆம் திகதிகளில் சீனா செல்வதாக இருந்த தனது பயணத்தை ஆன்டனி பிளிங்கன் ஒத்திவைத்தார். அமெரிக்காவின் குற்றச்சாட்டைசீனாதொடா்ந்து மறுத்து வருகிறது. அந்த பலூன் உளவு பார்க்க அனுப்பப்பட்டதல்ல என்றும், தனியாரின் வானிலை கண்காணிப்புப் பணிக்காக அனுப்பப்பட்டது என்றும் சீனா தெரிவித்தது. 'பலூனை சுட்டு வீழ்த்தியது அமெரிக்காவை பெரிய, வலிமையான நாடாக காண்பிக்கவில்லை. அதற்கு நோஎதிராகவேகாண்பிக்கிறது' என ஆன்டனி பிளிங்கனுடனான சந்திப்புக்கு முன்னதாக வாங் யீ தெரிவித்திருந்தார்.

## பாக். பொருளாதார நெருக்கடிக்கு நாணய நிதியத்திடம் தீர்வில்லை



பாகிஸ்தானின் பொருளாதார நெருக்கடிக்கானதீர்வுசா்வதேச நாணய நிதியத்திடம் (ஐஎம்எப்) இல்லை என பாகிஸ்தான்பாதுகாப்புத் துறைஅமைச்சா்கவஜா ஆசிப்தெரிவித்துள்ளார். சியால்கோட் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் அவர் தெரிவித்ததாவது:

நாடுகடனைசெலுத்தத் தவறிவிட்டது. இதற்கு, அதிகாரிகள், நிர்வாகம், அரசியல்வாதிகள் என அனைவரும் கூட்டாக பொறுப்பேற்க வேண்டும். பாகிஸ்தான் திவாலான நிலையில் உள்ளது. அந்த உருக்குலைவு ஏற்பட்ட நாட்டில்தான் நாம் இன்னும் வாழ்கிறோம். எனவே, பாகிஸ்தானை வலிமையான, நிலையான வகையில் உருவெடுக்கச் செய்ய வேண்டியது நமது கடமையாகும்.

நமது பிரச்சினைகளுக்கான தீர்வு நமது நாட்டுக்குள்தான் உள்ளது. பாகிஸ்தான் பிரச்சினைக்கானதீர்வை சர்வதேச நாணய நிதியத்திடம் தேட முடியாது. மேலும்,

அதற்கான தீர்வும் அதனிடம் இல்லை.

பாகிஸ்தானில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரசீர்குலைவு என்பது கடந்த 70 ஆண்டுகளில் நாட்டின் அரசமைப்பு மற்றும் சட்டத்தின்ஆட்சியைநாம் குறைந்தபட்சம்கூட மதிக்காமல்செயல்பட்டதன் விளைவு.

இவ்வாறு அமைச்சா் கவஜா ஆசிப் கூறினார்.

பாகிஸ்தானில் அந்நியச் செலாவணி கையிருப்பானது 3 பில்லியன் டொலர் என்ற அளவில்தான்உள்ளது. இது, 10-15 நாட்கள் இறக்குமதிக்கு கூட போதுமானதாக இருக்காது என அறிக்கைகள் தெரிவித்துள்ளன.

இந்த ஆண்டின் முதல் பாதியில் பாகிஸ்தானின் பணவீக்க சராசரி 33%ஆக இருக்கலாம் என்று மூடிஸ் அனலிட்டிக்ஸ் தெரிவித்துள்ளது.

பொருளாதாரத்தை மீட்டெடுக்க இந்த நிலையில், ஐஎம்எப் மூலம் திரும்ப கடன் பெறுவது மட்டுமே நலிந்த பொருளாதாரத்தை மீட்டெடுக்க உதவாது. தற்போதைய உண்மையான தேவை உறுதியான பொருளாதார மேலாண்மை மட்டுமே என மூத்த பொருளாதார நிபுணர் கத்ரீனா எல் தெரிவித்துள்ளார்.

## திருமணத்தில் பண மழை குஜராத்தில் விசித்திரம்





மகனின் திருமணத்தின்போது பணத்தாள்களை அள்ளி இறைத்த குடும்பத்தினர் இந்தியாவில் வியப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் உள்ள மெக்சனா மாவட்டம், காதி தாலுகா, அகோல் கிராமத்தை சேர்ந்தவர் கரீம் யாதவ். இவரது தம்பி ரசூல் யாதவ். கரீம் யாதவ் முன்னாள் பஞ்சாயத்து தலைவர் ஆவார். இவருக்குப் பிள்ளைகள் கிடையாது. தம்பி ரசூல் யாதவுக்கு ரசாக் என்ற மகன் உள்ளார்.

கடந்த சில நாட்களுக்கு முன்பு ரசாக்குக்கு சொந்த ஊரில் திருமணம் நடைபெற்றது. குடும்பத்தின் ஒரே வாரிசு என்பதால் அவரது திருமணத்தை விமரிசையாக நடத்தினர். மணமகனின் வீட்டுக்கு புதுமண தம்பதி வந்தபோது, கரீம் யாதவ், ரசூல் யாதவ் குடும்பத்தினர் தங்களது வீட்டின் முதல் மாடி, 2ஆவது மாடியில் இருந்து ரூபாய் நோட்டுகளை வாரியிறைத்தனர். 100 ரூபாய் நோட்டுகள், 500 ரூபாய்நோட்டுகள் காற்றில் பறந்து தரையில் சிதறின.

திடீரென பண மழை பெய்ததால் கிராம மக்கள் ஆச்சரியப்பட்டுத் திரண்டு வந்து ரூபாய் நோட்டுகளை முடிந்தவரை அள்ளினர். மணமகனின் குடும்பத்தினர் பல லட்சம் ரூபாய் நோட்டுகளை வாரியிறைத்து மக்களை மகிழ்ச்சியில் திக்கு முக்காடச் செய்தனர். இந்த வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகிறது.

இது குறித்து மணமகன் ரசாக் குடும்பத்தினர் கூறும்போது, "சில ஆண்டுகளுக்கு முன்பு குஜராத்தின் வல்சாத் பகுதியில் அறக்கட்டளைநிகழ்ச்சிக்காக பலர்பணத்தை வாரியிறைத்தனர். அப்போது ரூ.50 லட்சம் வரை பணம் சேகரிக்கப்பட்டது.

எங்களது குடும்பத்தின் ஒரே வாரிசு ரசாக். அவரது திருமணத்தை எங்கள் கிராமம், குஜராத் மாநிலம் மட்டுமன்றி ஒட்டுமொத்த நாடும் அறிய வேண்டும் என்பதற்காக திருமண விழாவில் பண மழை பொழிந்தோம்" என்றனர்.

## 11 குழந்தைகளுக்கு பின் கருத்தடை மனைவியை ஏற்க கணவர் மறுப்பு

இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் உள்ள கியான்ஹர் மாவட்டத்தில் 11 குழந்தைகளைப் பெற்ற பின்னர் கருத்தடை சிகிச்சை பெற்றுக் கொண்ட மனைவியை ஏற்க முடியாது என்று விலக்கி வைத்துவிட்டார் கணவர்.

ஒடிசாவில் புயான் என்ற பழங்குடியின மக்கள் வசிக்கின்றனர். அங்கு வாழ்பவர் ரபி டெடூரி (40). தினக் கூலியாக இருக்கிறார். இவரது மனைவி ஜானகி. இவர்களுக்கு 12 ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் நடைபெற்றது. அதன் பின், 5 ஆண் குழந்தைகள், 5 பெண் குழந்தைகள் உள்ளனர். ஒரு பெண்குழந்தை கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் இறந்துவிட்டது.

இந்நிலையில், ஜானகிக்கு கடந்த ஜனவரி 19ஆம் திகதி 11ஆவது குழந்தை பிறந்தது. அதன்பின் ஆர்தொண்டு நிறுவனத்தினரின் அறிவுரையை ஏற்று பெப்ரவரி 14ஆம் திகதி ஜானகி கருத்தடை செய்து கொண்டார்.

பின்னர் குழந்தையுடன் வீட்டுக்கு சென்ற ஜானகியை அவரது கணவர் ரபி சேர்க்க மறுத்து துரத்திவிட்டார். இது குறித்து ரபி கூறும்போது, "எங்கள் பழங்குடியினத்தில் கருத்தடை செய்து கொண்ட பெண்களை, எந்த சடங்கிலும் சேர்க்க மாட்டார்கள். என் மனைவிக்கு கருத்தடை செய்ய போவது குறித்து என்னிடம் ஆா பணியாளர்கள் அனுமதி பெற்றிருக்க வேண்டும். எனக்கு தெரியாமலேயே கருத்தடை செய்துள்ளனர்" என்றார்.

இதுகுறித்து திமிரியா பகுதி ஆா சேவகர் பிஜய் லட்சுமி சாஹூ கூறும்போது, "ஜானகியை வீட்டில் சேர்த்து கொள்ளும்படி ரபியிடம் பல முறை கேட்டுக் கொண்டார். ஆனால், அதற்கு அவர் தயாராக இல்லை. இந்தச் சூழ்நிலையில், ஜானகி, அவரது குழந்தையின் மறுவாழ்வுக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்" என்றார்.

இந்த நிலையில், ரபி - ஜானகி விவகாரம் குறித்துவிசாரணைநடத்த கியான்ஹர் மாவட்ட ஆட்சியர் ராமச்சந்திர கிஸ்கு உத்தரவிட்டுள்ளார்.

## இஸ்ரேலின் தாக்குதலில் சிரியாவில் 5 பேர் இறப்பு

*சிரியா தலைநகா டமாஸ்கஸில் குடியிருப்புக் கட்டடம் ஒன்றைக்குறிவைத்து இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 5 போ உயிரிழந்தனர்.*

*டமாஸ்கஸின் மத்திய பகுதியில் ஞாயிற்றுக்கிழமைஅதிகாலைநடத்தப்பட்ட இந்த ஏவுகணைத் தாக்குதலில் ஒரு சிப்பாய் உள்பட 5 பேர் கொல்லப்பட்டனர்; பொதுமக்கள் 15 போ காயமடைந்தனர்; பல கட்டடங்கள் சேதமடைந்தன என்று சிரியாவின் அரசுத் தரப்பு செய்தி நிறுவனமான 'சனா' தெரிவித்துள்ளது.*

*சிரியாவில் செயல்பட்டு வரும் ஈரான் ஆதரவு பயங்கரவாதக் குழு, லெபனான் பயங்கரவாதக் குழுவான ஹிஸ்புல்லா ஆகியவற்றைக் குறிவைத்து இஸ்ரேல் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகிறது. சிரியா அரசின் கட்டுப்பாட்டு பகுதியில் உள்ள இந்தப் பயங்கரவாத அமைப்புகளின் நிலைகள் மீது நடத்தப்படும் தாக்குதலுக்கு இஸ்ரேல் வெளிப்படையாக பொறுப்பேற்பதில்லை.*

*அந்த வகையில் இப்போதைய தாக்குதல் குறித்தும் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.*

*துருக்கி, சிரியாவில் கடந்த பெப்ரவரி முதல் வாரத்தில் ஏற்பட்ட பயங்கர நிலநடுக்கத்துக்குப் பின்னா, முதல் முறையாக இந்தத் தாக்குதலை இஸ்ரேல் நடத்தியுள்ளது.*

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# ரணில் நேர்மையற்றவர்: ஓர் அதிகார வெறியன்

## அதிகாரத்தைப் பெற எதையும் செய்வார் என்கிறார் கஜேந்திரகுமார்



–எஸ்.நிதர்ன்–

தமிழர்களுக்கான நியாயமான தீர்வை ரணில் விக்கிரமசிங்க ஒருபோதும் வழங்க மாட்டார். அவர் நேர்மையானவர் அல்லர். அதிகார வெறியன். அதிகாரத்தை பெற்றுக் கொள்ள எதையும் செய்வார். அப்படிப்பட்ட ஒருவர் தமிழ் மக்கள் நிராகரித்த ஒன்றை வழங்கப் போவதாக கூறுகின்ற நிலையில் அதனை நிராகரிக்கக்கூட முதுகெலும்பு அற்றவர்களாக தமிழர் தரப்பிலும் சிலர் இருப்பது வேதனைக்குரியது.

இவ்வாறு அகில இலங்கைத்தமிழ்க்காங்கிரஸ்தலைவர்கஜேந்திரகுமார்பொன்னம்பலம் தெரிவித்தார். அவரது கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுகக் கூட்டம்சனிக்கிழமையாழ்ப்பாணம்,நாச்சிமார்கோயில் மண்டபத்தில் இடம்பெற்றபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்த பிற்பாடு இந் நாட்டில் நீண்டகாலமாக காணப்படுகின்ற இப்பிரச்சனைக்கு தீர்வை ஏற்படுத்தப் போவதாக உலகத்திற்கு அறிவித்துவிட்டு சர்வகட்சி கூட்டம் என்றும் தமிழர் தரப்புடன் பேச்சு என்றும் சில நாடகங்களை நடத்தியிருந்தார்.

அதற்கு எங்களது தரப்பையும் அழைத்த போது நாம் சில நிபந்தனைகளை விதித்திருந்தோம். ஆனாலும் அதற்கு இணங்காத காரணத்தினால் நாம் அத்தகைய பேச்சு சந்திப்புக்களில் கலந்து கொள்ளாது புறக்கணித்த போதும் ஒற்றையாட்சியை ஏற்றுக்கொண்ட சில தரப்புகள் பேச்சிற்குச் சென்றன.

தற்போது அந்த பேச்சும் முடிந்த கதையாகிவிட்டது. ஏனெனில் இனப்பிரச்சனைக்கு தீர்வினை வழங்குவதற்கு சிங்கள தேச தலைவர்கள் தயாராக இல்லை. இது எல்லாம்அறிந்தும்தெரிந்தும்தான் இவ்வாறானதொரு முயற்சியே முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக ரணில் விக்கரமசிங்க அரசியலுக்கு புதியவர் அல்லர். இதற்கு முன்னரும் அவர் தமிழர் தரப்புக்களுடன் குறிப்பாக புலிகளுடன் பேச்சு நடத்தியுள்ளார். அதில் நானும் பங்கு கொண்டேன் என்ற அடிப்படையில்தான் ரணில் விக்கிரமசிங்க எவ்வாறு செயற்படுவார் என்பது எங்களுக்கு தெரியும்.

அதனால்தான் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடியதாக தமிழர் தேசத்தை அங்கீகரித்து சுயநிர்ணய அடிப்படையில் சமஸ்டி தீர்வை கோரி நிபந்தனை விதித்திருந்தோம். ஏனெனில் எமது மக்கள் இனியும் ஏமாறவோ பாதிக்கப்படக் கூடாது என்ற அடிப்படையில் நாம் இதைச் செய்திருந்தோம்.

தற்போது அவர் தனது சுய ரூபத்தையும் வெளிப்படுத்தி இருக் கின்றார். அதாவது பேச்சிற்கு அழைத்து ஒற்றையாட்சி கட்டமைப்புதான் தீர்வு என்று ஒருதலைப் பட்சமாக அறிவித்தார். பல வருடங்களாகத் தமிழ் மக்கள் அடியோடு நிராகரித்து வந்த அரசமைப்பின்13ஆவதுதிருத்தத்தைத் தீர்வாக நடைமுறைப்ப டுத்தப் போவதாகவும் கூறியிருக்கின் றார். தமிழ் மக்கள் ஏற்காத இத்த கையதீர்வு தேவையில்லை எனக் கூற முதுகெலும்பு அற்றவர்கள் அதற்கு இணங்கி இருக்கின்றார்கள்.

இவ்வாறான ஏமாற்று தந்திரவாதியான ரணில் விக்கிரமசிங்கவை தான்புலிகளின்அரசியல்ஆலோசகர் ரணில்ஒருநரிஎன்று கூறியிருந்தார். ஏனெனில்அவருடன்பேச்சுநடத்தகாலத்தில் பேச்சில் ஒரு முகத்தைக் காட்டிக் கொண்டு மற்றொரு பக்கம் பாதுகாப்பு படைகளை பல மடங்கு அதிகரித்து போருக்குத் தயாராகினார். இந்த இனத்தை அழிக்க அத்திவாரமிட்டு இனவழிப்பு செய்தவராகவும் அவர் இருக்கின்றார். இப்படிப்பட்ட ஒருவர் என்ன செய்வார், செய்தார் என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களுக்கு நியாயமான தீர்வொன்று கட்டாயம் தேவை. ஆனால் அதனை ரணில் விக்கிரமசிங்க போன்றவர்கள் ஒருபோதும் தமிழர்களுக்குக் கொடுக்க மாட்டார்கள். ரணில் விக்கிரமசிங்க ஒரு அதிகார வெறியன். அதிகாரத்தை பெற்றுக் கொள்வதற்கு அவர் எதனையும் செய்வார். ரணில் விக்கிரமசிங்க குறித்து நாம் அன்று முதல் சொல்லி வருவது தற்போது நிரூபிக்கப்பட்டுள்ளது.

இன்றைய பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை ரணிலாலே மீட்டெடுக்க முடியுமென உலகம் கூறுகின்ற நேரத்தில் அவரால் தமிழ் மக்களுக்கான தீர்வை ஒருபோதும் வழங்க முடியாது என நாம் அடித்துக்கூறுகின்றோம். ஏனெனில் அவர் யார் என்பது தற்போது தெளிவாக அனைவருக்கும் தெரிந்திருக்கும் – என்றார்.

# ராஜபக்ஷக்களின் ஊழல் மோசடியால்தான் நாடு வங்குரோத்து நிலையை அடைந்தது

## சந்திரிக்கா குற்றச்சாட்டு



ராஜபக்ஷ குடும்பம் எவ்வித வரையறையும் இல்லாமல் அரச நிதியைக் கொள்கையடித்ததால் நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளது. பொருளாதாரப் பாதிப்பு என குறிப்பிட்டுக் கொண்டு அரச தலைவர்கள் இன்று சர்வதேசத்திடம் யாசகம் பெறுகிறார்கள். நாட்டின் இன்றைய அவல நிலையால் மன வேதனைக்குள்ளாகியுள்ளேன் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

மதுகம நகரில் நவ லங்கா சுதந்திர கட்சியின் தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்துக் கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

நாட்டின்இன்றையஅவலநிலையை கண்டுமனவேதனையடைகிறேன்.முழு உலகத்துக்கும்சிறந்தஎடுத்துக்காட்டாக இருந்த இலங்கை, இன்று ராஜபக்ஷ குடும்பத்தின் ஊழல் மோசடியால் வங்குரோத்துநிலைஅடைந்துள்ளது. பொருளாதாரப் பாதிப்பு எனக் குறிப்பிட்டுக்கொண்டுஅரசதலைவர்கள் தற்போது சர்வதேசத்திடம் யாசகம் பெறுகிறார்கள்.

நாடு வங்குரோத்து நிலை அடைந்துள்ளதை பொருளாதார பாதிப்பு என்ற வரையறைக்குள் மாத்திரம் வைத்து மதிப்பிட முடியாது. பொருளாதாரப் பாதிப்பால் சமூக கலாசாரம், நல்லிணக்கம், தேசிய பாதுகாப்பு, கருணை, பிறருக்கு உதவி செய்தல் என அனைத்து நல்ல விடயங்களும் சீரழிந்து விட்டன. பொருளாதாரப் பாதிப்பால் நாடு சீரழிந்து விட்டது.

எனது 11 வருட ஆட்சிகாலத்தில் யுத்தத்துடன் போராடினேன். ஒரு யுத்தத்தை புரிந்துகொண்டு மறுபுறம் நாட்டைஅபிவிருத்திசெய்தேன். பதவிகாலம்முடிந்தபிறகுமுன்னாள்ஜனாதிபதிமஹிந்தராஜபக்ஷவிடம்ஆட்சியை ஒப்படைக்கும்போதுநாட்டில்ரூபாவும் இருந்தது, டொலரும் இருந்தது, ராஜபக்ஷ குடும்பம் மக்களாணை எனக் குறிப்பிட்டுக் கொண்டு நாட்டு மக்களைத் தவறாக வழிநடத்தி ஆட்சியைக் கைப்பற்றினார்கள். ஒரு குடும்பம் முழு நாட்டையும் சூறையாடியது. வரையறையற்ற அரச முறை கடன்களினாலும் ,அனைத்து அபிவிருத்திகளிலும் மேற்கொள்ளப்பட்ட மோசடியாலும் நாடு பாரிய கடன் சுமையை எதிர் கொண்டது.

ராஜபக்ஷகுடும்பமும்,அவர்களை சார்ந்தோரும்எவ்விதவரையறையும் இல்லாமல் அரச நிதியைக் கொள்கையடித்தார்கள். ஊழல் மோசடி தொடர்பில் மஹிந்த ராஜபக்ஷ அவதானம் செலுத்தவில்லை, அகப்படாத வகையில் ஊழல் மோசடிகளை செய்யுங்கள் என அவர் அவரது சகாக்களுக்கு ஆலோசனை வழங்கினார். இறுதியில் நேர்ந்தது என்ன? பொருளாதார பாதிப்பு முழு நாட்டையும்வங்குரோத்துநிலைக்குக் கொண்டு சென்றுள்ளது.

மிண்டும்ராஜபக்ஷர்கள்தலைமையிலான ஆட்சியை உருவாக்குவதாக குறிப்பிட்டுக் கொண்டு ஒரு தரப்பினர் அரசியல் செய்கிறார்கள். நாட்டின் எதிர்காலத் தலைமுறையினரின் நலனைக்கருத்திற்கொண்டுமிகுதியாக இருக்கும் வளங்களைப் பாதுகாக்க வேண்டுமாயின் ராஜபக்ஷர்கள் கௌரவமாக அரசியலில் இருந்து விலக வேண்டும். அதுவே நாட்டுக்கு செய்யும் அளபரிய சேவையாக காணப்படும். – என்றார்.

# அரசைப் போன்றே முஸ்லிம் தலைமைகளும் தேர்தலை எதிர்கொள்ளப் பயப்படுகின்றன

## இம்ரான் மகரூப் எம் பி தெரிவிப்பு



(ஹஸ்பர்)

ஆளுங்கட்சிக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கில்லை. அதனால் தேர்தலை நடத்த அச்சப்படுகிறது.

தேர்தலை நடத்த அரசாங்கம் பயப்படுவதை போன்றேமுஸ்லிம்தலைமைகளும்தேர்தலைஎதிர்கொள்ளப் பயப்படுகின்றன என்று தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப்.

கிண்ணியா அண்ணல் நகரில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்கள்மத்தியில்வர முடியாத ஆளும்கட்சியினர் தொடக்கத்தில் அதிகாரிகளை அச்சமூட்டி தேர்தலைபிற்போடமுயற்சித்தார்கள். தற்போது பெற்றோல், மின் கட்டணங்கள், பொருட்களின் விலைகளை அதிகரித்து மக்களை அச்சமூட்டி தேர்தலைப் பிற்போட முயற்சிக்கிறார்கள்.

நமதுநாடுபொருளாதார சிக்கலில்இருப்பதற்குபிரதான காரணம்ராஜபக்ஸவினர்தான். அந்தராஜபக்சவினருக்கு69 இலட்சம்மக்கள்வாக்களித்து வழங்காத அதிகாரத்தை அரசமைப்பின் 20ஆம் திருத்தத்திற்கு ஆதரவளித்து சில முஸ்லிம் தலைமைகள் வழங்கின. இந்தத் தேர்தல்மூலம் 20க்கு வாக்களிந்தவர்களுக்கு மக்கள்பாடம்படிப்பிக்கவேண்டும் – எனவும் கேட்டுக்கொண்டார்.

# கர்ப்பிணிப் பெண் வயிற்றில் எட்டி உதைந்த கணவர் கைது

கணேமுல்ல அமுனுகொடவீடொன்றில் நடைபெற்ற பிறந்தநாள் விழாவின்போது கர்ப்பிணிப் பெண்ணின் வயிற்றில் எட்டி உதைத்த கடற்படை சிப்பாய் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தாக்கப்பட்ட நான்கு மாதகர்ப்பிணிப்பெண், பொரளை டி சொய்சா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

தனது மனைவியையே அவர் இவ்வாறு எட்டி உதைத்தார் எனத் தெரியவந்துள்ளது. எட்டி உதைத்தமையால் கரு கலைந்துள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர் எனப் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கைதுசெய்யப்பட்டுள்ள கடற்படை சிப்பாயின் சகோதரி ஒருவரின் வீட்டில் பிறந்தநாள் நிகழ்வு இடம்பெற்றுள்ளது. அங்கேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சந்தேக நபரான கடற்படை சிப்பாய் தனது கர்ப்பிணி மனைவியின் வயிற்றில்பலமுறைஉதைத்தார் எனவும் பொலிஸ் அதிகாரிதெரிவித்தார். உதைத்த பின்னர் கர்ப்பிணி தரையில் வீழ்ந்தார் எனவும் கூறப்படுகின்றது.

# கலையரங்க திறப்பு விழா

தென்மராட்சி, பெப். 20

கைதடி மத்தி உதயசூரியன் சனசமூக நிலையத்தின் 44ஆவது ஆண்டு விழாவும்–கலையரங்க திறப்புவிழாவும்இன்று மாலை 6 மணிக்கு உதயசூரியன்சனசமூக நிலைய வளாகத்தில் இடம்பெறுகின்றன.

சனசமூக நிலைய தலைவர் வே.குகன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளு மன்ற குழுக்களின் பிரதி தவிசாளரான அங்கஜன் இராமநாதனும் சிறப்பு விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் க.வாமதேவனும், கௌரவ விருந்தினர்களாக வலிகாமம் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மதியழகன்,

உதயசூரியன் சனசமூக நிலையத்தின் நிர்வாக உறுப்பினர் க.சந்திரகுமார், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் தங்கவேலு மற்றும் சுதந்திரக் கட்சியின் கைதடி 7ஆம் வட்டார வேட்பாளர் பாலசுப்பிரமணியம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# "தேர்தலை நடத்த வைப்போம்" முல்லையில் சுமந்திரன் சூளுரை

தேர்தல் நடக்குமா, இல்லையா என்ற கேள்விக்கு மத்தியில் நாங்கள் பரப்புரை செய்கின்றோம். தேர்தல் நடக்க வேண்டும். நடத்த வைப்போம். நாங்கள் தேர்தல் நடக்க வேண்டும் என்று மக்கள் மத்தியில் சொல்கின்றோம். தேர்தல் நடக்காமல் பிற்போடப்பட்டால் அந்தக் குள்ளநரித்தனத்தையும் வெளிக்கொண்டு வருவோம்.

இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு பிரதேசபைக்கான வேட்பாளர் அறிமுகக் கூட்டம் முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் நேற்று (19) நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்கள் தேர்தல் நடக்குமா என்று கேட்கின்றார்கள். ஜனாதிபதிக்கு தேர்தலைச் சந்திக்கப் பயம். இதன் காரணத்தால் தேர்தலை பிற்போடப் பார்க்கின்றார்கள்.

மாகாண சபைத் தேர்தலையும் பெரும் சூழ்சியால் காலவரையறையின்றிப் பிற்போட்டுவிட்டார்கள். 2019 ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்காக தனிநபர் சட்டவரைவை நாடாளுமன்றத்தில் நான் சமர்ப்பித்தேன்.

இப்போது அவர்கள் என்ன செய்கின்றார்கள்? மாகாண அதிகாரமும் கிடையாது. உள்ளூராட்சி அதிகாரங்களையும் பாவிக்கவிடாமல் பறித்து எடுத்துவிட்டார்கள்.

மக்கள் ஆணை இல்லாமல் குறுக்கு வழியில் ஜனாதிபதியாக வந்த ஒருவர் முழு அதிகாரத்தையும் தன் கைக்குள் கொண்டு வரும் சூழ்ச்சிதான் தேர்தலைப் பிற்போட எடுக்கப்படும் நடவடிக்கை. இதற்கு எதிராக நாங்கள் திரண்டெழ வேண்டும்.




இந்தத் தேர்தலின் முக்கியத்துவத்தை உணர்ந்த காரணத்தால்தான் தேர்தலைப் பிற்போட முனைகின்றார்கள்.

தேர்தல் வந்தால் ஆட்சியில் இருப்பவர்களை மக்கள் தூக்கி கடாசி விட்டார்கள் என்பது தெட்டத்தெளிவாகத் தெரியவரும் – என்றார்.

# ரணிலின் கொள்கைகளை அமுல்படுத்துபவரே சஜித்

## ஜேவிபி முன்னாள் எம்பி. நலிந்த ஜயதிஸ்ஸ சாட்டை

எதிர்வரும் தேர்தலில் அடையவுள்ள தோல்வியால் மனமுடைந்துள்ள எதிர்க்கட்சித்தலைவர் சஜித் அதனை ஏற்றுக்கொள்ள முடியாமல் அச்சமடைந்துள்ளார் எனவும், மேலும் சஜித் என்பவர் ரணில் இல்லாமல் ரணிலின் கொள்கைகளை அமுல்படுத்தும் குழுவைச் சேர்ந்தவர் என்றும் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

சஜித் அரசாங்கத்திடம் தேர்தலை நடத்துமாறு தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த போதிலும் தேர்தலில் அடையவுள்ள தோல்வி தொடர்பில் அச்சமடைந்துள்ளார்.

தோல்வியை ஏற்றுக்கொள்ளமுடியாமல் தேசிய மக்கள் சக்தி மீது கடும் அதிருப்திகொண்டுள்ளார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

நடைபெறவுள்ள தேர்தல், வரலாற்றில் முக்கியமான ஒன்றாகும். முன்னதாக அரசாங்கத்தினர் தேர்தல் காலங்களில் கிராம மட்டங்களில் உள்ள மக்களிடம் சென்று தங்களுக்குத் தேவையான அனைத்தையும் நிறைவேற்றித்தருவதாக வாக்குறுதி அளிப்பார்கள்.

இருப்பினும் இன்று இதற்கு தலைகீழாக இம்முறை தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு அரசாங்கம் கடுமையாகச் செயற்பட்டு வருகிறது.

தற்போது அதன் ஓர் அங்கமாக அரச அச்சக கூட்டுத்தாபனத்தின் மீது அரசாங்கத்தின் ஆதிக்கத்தை செலுத்தியுள்ளது. இருப்பினும் அச்சகத்தால் பாரியளவிலான தபால் வாக்குச்சீட்டுகள் அச்சடிக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்று ரணில் தலைமையிலான மொட்டு அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. ராஜபக்ஷவை தொங்கிக்கொண்டு இருந்தவர்கள் இப்போது தனித்தனியாக கூட்டுகளாக பிரிந்து சென்றிருந்தாலும், மக்கள் அவர்களை முற்றாக நிராகரித்துள்ளனர்.

சஜித் என்பவர் கூட அரசியலுக்குப் புதியவரல்லர். வங்குரோத்து அடைந்த அரசாங்கத்தின் பங்காளி. 2015 முதல் 2019 ஆண்டு வரை நல்லாட்சி அரசாங்கத்தின் முக்கிய அமைச்சுப் பதவியை வகித்த ஒருவராவார். அவரின் கீழிருந்த எந்தவொரு திணைக்களமும் இலாபத்தை ஈட்டவில்லை.



4 ஶ்ரீ லங்கன் எயார் லைன்ஸ் பஸ்கள் கொள்வனவு செய்யப்பட்ட போது 2 கோடி டொலரை இலஞ்சமாக பெற்றுக்கொண்டதாக சரத் பென்சேகா கூறியிருந்தார்.

ஹர்ஷ டி சில்வா, எரான் விக்ரமரத்ன ஆகியோர் நல்லாட்சி அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் வெளிநாட்டு அமைச்சுகளை பொறுப்பேற்று அமைச்சர்களாக செயற்பட்டவர்கள்.

சஜித் பிரேமதாஸ வீடமைப்பு அமைச்சராகப் பதவியேற்பதற்கு முன்னர் விமல் வீரவன்ஸ வீடமைப்பு அமைச்சராக செயற்பட்டவர். இருப்பினும், விமல் அமைச்சராக செயற்பட்டபோது இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கைகளையும் சஜித் பிரேமதாஸ எடுக்கவில்லை.

திருடர் மூலம் திருடர் பாதுகாக்கப்பட்டார். பொருளாதாரத்தைன் கட்டியெழுப்பவில்லை. இந்த கும்பலின் சாயல் எவ்வாறு என்பது நாட்டு மக்களுக்கு நன்றாகர் தெரியும். அன்று ரணிலின் வரவு - செலவு திட்டத்துக்கு ஹர்ஷ டி சில்வா குற்றம் சுமத்தினார்.

சஜித் என்பவர் ரணில் இல்லாத ரணிலின் கொள்கைகளை அமுல்படுத்தக்கூடிய தரப்பை சேர்ந்தவர். - என்றார்.

# தனமல்வில பகுதியில் கஞ்சாசெடி முற்றுகை!



தனமல்வில பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அம்பிலிபிட்டிய பிரதேசத்தில் காணப்பட்ட கஞ்சா தோட்டங்களை விசேட அதிரடிப்படையினர் ஞாயிற்றுக்கிழமை முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்போது அங்கிருந்தவர்கள் தப்பி ஓடியுள்ளனர் எனவும் 8 ஆயிரத்து 410 கஞ்சா செடிகளை பிடுங்கி அழித்ததுடன் உள்ளூர் தயாரிப்பு ஒன்றை மீட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தனமல்வில பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கதிர்காமம் விசேட அதிரடிப்படைக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் அதிரடிப்படை கதிர்காம விசேட அதிரடிப்படை அதிகாரி வை.பி.ஏ. சுலோச்சனா தலைமையிலான அதிரடிப்படையினர் சம்பவதினமான ஞாயிற்றுக்கிழமை அம்பிலிபிட்டிய பிரதேசத்தில் சட்டவிரோதமாக கஞ்சா பயிரிடப்பட்டு வந்த இரண்டு கஞ்சா தோட்டங்களை முற்றுகையிட்டுள்ளனர்.

இதனையடுத்து கஞ்சா பயிரிட்டுவந்தவர்கள் அங்கிருந்து தப்பி ஓடியதுடன் அங்கிருந்த ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டிருந்த 5 அடி உயரம் கொண்ட 7 ஆயிரத்து 600 கஞ்சா செடிகளையும் அடுத்து தோட்டத்தில் 20 பரப்பு நிலப்பரப்பில் பயிரப்பட்டிருந்த 3 அடி உயரம் கொண்ட 810 கஞ்சா செடிகள் உட்பட 8 ஆயிரத்து 410 செடிகளை பிடுங்கி தீயிட்டு அழித்துள்ளனர்.

அதேவேளை அங்கிருந்த உள்ளூர் தயாரிப்பு துப்பாக்கி ஒன்று மற்றும் மருந்துக்களை மீட்டு அதிரடிப்படையினர் தம்மிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தனமல்வில பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பெண்கள் ரி-20 உலகக் கிண்ணம்

# மோசமான தோல்வியுடன் வெளியேறியது இலங்கை



பெண்கள்ரி-20உலகக்கிண்ணத் தொடரில் நியூசிலாந்து அணியுடனான போட்டியில் 102 ஓட்டங்களால் மோசமான தோல்வியினைப் பெற்றிருக்கும் இலங்கை அணி அந்தத் தோல்வியுடன் தொடரில் இருந்தும் வெளியேறுகின்றது.

ரி-20உலகக்கிண்ணத்தொடரின் குழு ஏ இல் இடம்பெற்ற இலங்கை பெண்கள் கிரிக்கெட் அணி, இரண்டு வெற்றிகளைப் பெற்ற நிலையில் அரையிறுதி வாய்ப்பிற்காக கட்டாய வெற்றியினை எதிர்பார்த்து நியூசிலாந்தை ஞாயிற்றுக்கிழமை பார்ல் மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் எதிர்கொண்டது.

போட்டியின்நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 162 ஓட்டங்கள் எடுத்தது. அமெலியா கெர் 66 ஓட்டங்களை எடுத்தார். சூஸிபெட்ஸ் 59 ஓட்டங்கள் பெற்றார். இலங்கை பெண்கள் அணியின் பந்துவீச்சில் இனோக்க ரணவீர மற்றும் அச்சினி குலசூரிய ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

வெற்றிஇலக்காகநிர்ணயிக்கப்பட்ட 163 ஓட்டங்களை அடைய களமிறங்கிய இலங்கை பெண்கள் கிரிக்கெட் அணி ஆரம்பம் முதலே மோசமான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி, 15.5 ஓவர்களிலேயேசகலவிக்கெட்டுக்களையும் பறிகொடுத்து 60 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது. சமரி அத்தபத்து 19 ஓட்டங்களுடன் இலங்கைத் தரப்பில் வீராங்கனை ஒருவர் பெற்ற கூடுதல் ஓட்டங்களைப் பதிவு செய்தார்.

நியூசிலாந்தின் அமெலியா கெர் மற்றும் லியா தஹு்கு ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்கள் வீதம் சாய்த்து தமது தரப்பு வெற்றியினை உறுதி செய்திருந்தனர்.

இந்தப்போட்டியின் தோல்வியுடன் இலங்கை பெண்கள் அணி ரி-20 உலகக் கிண்ண அரையிறுதி வாய்ப்பினைஇழந்து, தொடரிலிருந்தும் வெளியேறுகிறது.

# இலங்கை 'ஏ' அணியிலிருந்து மத்யூஸ் விடுவிக்கப்பட்டார்




இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிராக நடைபெறவுள்ள மூன்றாவது உத்தியோக பூர்வமற்ற ஒருநாள் போட் டியிலிருந்து அஞ்சலோ மத்யூஸ் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை அணியின் அனுபவ வீரரான அஞ்சலோ மத்யூஸ், இந்தத் தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் விளையாடியிருந்ததோடு, இரண்டாவது போட்டியில் அரைச்சதமும் அடித்திருந்தார்.

நியூசிலாந்து சுற்றுப் பயணத்துக்காக இலங்கை அணி தயாராகி வருகின்ற நிலையில், ரத்தெல்ல மைதானத்தில் நடைபெற்றுவருகின்ற பயிற்சி முகாமில் இணைந்துகொள்வதற்காகவே இலங்கை 'ஏ' குழாத்திலிருந்து அவர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆயினும் அவருக்குப் பதிலாக மாற்றுவீரர்எவரையும் இலங்கை 'ஏ' அணி பெயரிடவில்லை.

இரண்டாவது போட்டியில் விளையாடிய 'ஏ' குழாத்திலிருந்து எந்தவித மாற்றங்களையும் இலங்கை கிரிக்கெட் சபை மேற் கொள்ளவில்லை. தேசிய அணி வீரர்களான நுவனிது பெர்னாண்டோ, அவிஷ்க பெர்னாண்டோ, சதீர சமரவிக்ரம, பிரமோத் மதுசான் மற்றும் துனித் வெல்லாலகே போன்ற வீரர்கள் தொடர்ந்தும் 'ஏ' அணியில் இணைந்துள்ளனர்.

இங்கிலாந்துலயன்ஸ்மற்றும் இலங்கை 'ஏ' அணிகளுக்கு இடையிலான மூன்றாவது ஒரு நாள் போட்டி நாளை செவ்வாய்க்கிழமைநடைபெறவுள்ளது.



# நெதர்லாந்து ஓபின் டென்னிஸ் டேனில் மெட்வடேவ் சம்பியன்!

நெதர்லாந்தின்ரோட்டர்டாம்ஓபின் டென்னிஸ் தொடரில் ரஷ்யாவின் டேனில் மெட்வடேவ் சம்பியன் பட்டத்தைக்கைப்பற்றியுள்ளார். 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற அமெரிக்க ஓபின் டென்னிஸ் தொடரில் சம்பியன் பட்டத்தை வென்ற 27 வயதான டேனில் மெட்வடேவ்வுக்கு இது 16 ஆவது பட்டமாகும்.

கடந்த ஒக்டோபரில் வியன்னா பகிரங்க ஓபின் தொடரில் வென்ற பிறகு அவர் வெல்லும் முதல் ஏ.டி.பி. சம்பியன் பட்டம் இதுவாகும்.

நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டியில், இத்தாலியின் ஜானிக் சின்னரை டேனில் மெட்வடேவ் எதிர்கொண்டிருந்தார். விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப்போட்டியில், 5-7 6-2 6-2 என்ற கணக்கில் சின்னரை தோற்கடித்து டேனில் மெட்வடேவ் சம்பியன் பட்டம் வென்றார்.

தற்போது உலக அளவில் பதினோராவது இடத்தில் இருக்கும் மெட்வடேவ், இந்த வெற்றியின் மூலம் ஏ.டி.பி. தரவரிசையில் முதல் 10 இடங்களுக்குள் முன்னேறுவார்.

# இந்தியாவுடனான 3ஆவது டெஸ்ட் போட்டி ஆஸ்திரேலிய தலைவர் கம்மின்ஸ் வருவார்!



இந்திய அணிக்கு எதிராக இந்தூரில் நடைபெறவுள்ள மூன்றாவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேலிய அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் தவறவிட மாட்டார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் விளையாடிய பட் கம்மின்ஸ், தனிப்பட்ட காரணங்களுக்காக ஆஸ்திரேலியா திரும்பியுள்ளார். பட் கம்மின்ஸ் இந்தியா திரும்பி இந்த வார இறுதியில் மீண்டும் பயிற்சிகளை மேற்கொள்வார் என்று அந்த நாட்டு கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. எனவே, பட் கம்மின்ஸ் மூன்றாவது டெஸ்ட் போட்டியைத் தவறவிடமாட்டார் எனவும் அந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் தோல்வியடைந்துள்ள ஆஸ்திரேலிய அணி, இந்தூரில் நடைபெறவுள்ள மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விளையாடும் அணியில் சில மாற்றங்களை மேற்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதன்படி, உபாதைகளுக்கு முகங்கொடுத்திருந்த மிட்ச்செல் ஸ்ட்ராக், ஜோஸ் ஹஸல்வூட் மற்றும் கிரிஸ் கிரீன் ஆகியோர் உடல் நலம் தேறி, மூன்றாவது டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# யாழ்ப்பாணக் கல்லூரி தொடங்கி 200 ஆண்டுகள்

## கொண்டாட்டங்கள் களைகட்டின









வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் இருநூறாவது ஆண்டு நிறைவுக் கொண்டாட்டங்கள் கல்லூரியின் அதிபர் ருஷிரா குலசிங்கம் தலைமையில் சம்பிரதாயபூர்வமாக இன்று தொடக்கி வைக்கப்பட்டது.

தொடக்க நிகழ்வாக வட்டுக்கோட்டை தென்னிந்தியதிருச்சபைபேராலயத்தில்விசேட ஆராதனை வழிபாடுகள் இடம்பெற்றன. கல்லூரியின் 200 ஆவது ஆண்டினைக் கொண்டாடும் முகமாக 200 வது ஆண்டு பொறிக்கப்பட்ட கல்லூரிக் கொடி நிறத்தில் செய்யப்பட்ட கேக் ஒன்றையும் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் வெட்டினார்.

கல்லூரி அதிபரால் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்கான வலைத்தளம் ஒன்றும் அங்குரார்பனம் செய்யப்பட்டது.

தொடர்ந்து கல்லூரியின் சீரமைக்கப்பட்ட விக்னல் மெமோரியல் மைதானத்தில் கல்லூரியின் 200ஆவது ஆண்டிற்கான விசேட சின்னம் கல்லூரியின் அதிபர் ருசிரா குலசிங்கம் மற்றும் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் வண.பத்ம தயாளனால் திரைநீக்கம் செய்யப்பட்டது.

சமநேரத்தில் பட்டாசுகள் வெடித்து ,கல்லூரியின் வர்ணம் தாங்கிய பலூண்களும் ஆகாயத்தில் பறக்க விடப்பட்டன.

200ஆவதுஆண்டினைநினைவுகூரும் ஜேர்சி, சொக்ஸ் மற்றும் கல்லூரியின் நாட்காட்டியும் அறிமுகப்படுத்தப்பட்டன. 200 மரக் கன்றுகளும் நாட்டப்பட்டன.

தென்னிந்திய திருச்சபையின் பேராயர், அங்கெலிக்கன் திருச் சபையின் தலைவர், மெதடிஸ்த திருச்சபையின் தலைவர், யாழ் மாவட்ட தனியார் பாடசாலைகளின் அதிபர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், கல்லூரிஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள்,நலன்விரும்பிகள்,பெற்றோர்கள் என என பலர் இன்றைய நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# சிறைச்சாலைக் கைதிகளின் உணவுக்காக வருடமொன்றுக்கு 700 கோடி ரூபா செலவு!

நாடளாவியரீதியில்சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளுக்கு வருடமொன்றுக்கு உணவு வழங்குவதற்காக 700கோடிரூபாசெலவிடப்படுகிறது.

மேலும், நாட்டில் உள்ள சிறைச்சாலைகளை இயக்கு-வதற்குவருடமொன்றுக்கு1100 கோடி ரூபா செலவிடப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின்ஆணையாளர் நாயகம் துஸார உபுல்தெனிய தெரிவித்தார்.

அதன்படி, சிறைச்சாலைகளில்தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளின் உணவுக்காக மாத்திரம் வருடமொன்றுக்கு 700கோடியே40லட்சம்ரூபா செலவிடப்படுகிறது.

மேலும், நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து சிறைச்சாலைகளையும் இயக்குவதற்காக வருடமொன்றுக்கு 1100 கோடி ரூபா செலவிடப்படுகிறது.

இந்நிலையில் வரி செலுத்தும்மக்களின்பணத்தில் சிறைச்சாலைகளைப் பராமரிக்காமல், தடுப்பு காவலில் வைக்கப்பட்டுள்ள கைதிகளை தொழில் முயற்சிகளில் ஈடுபடுத்தி அதன் மூலம் கிடைக்கப்பெறும் பணத்தைக் கொண்டு சிறைச்சாலை கட்டமைப்புகளை பராமரிப்பதற்கான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன என ஆணையாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

## தேர்தலை நடத்து.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரணி மருதானை ‘டெக்னிகல்’ சந்தியை அடைந்தபோது, பொலிஸார் அதைக் கலைக்க முயன்றதால் பதற்றம் ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பொலி-ஸார் நீர்த்தாரை இயந்திரங்களைப் பயன்படுத்தியதுடன் கண்ணீர் புகைக் குண்டுகளையும் வீசினர். எனினும் எதிர்ப்பையும் மீறி போராட்டக்காரர்கள் முன்னேற முயற்சித்தனர். இதனால் இரு தரப்பினருக்கும் இடையில் பதற்றம் ஏற்பட்டது.

முன்னதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கொழும்பின் பல பகுதிகளுக்குள்ளும் நுழைவதற்கான தடை உத்தரவுகளை கொழும்பு நீதிவான் மன்றில் இருந்து பொலிஸார் பெற்றிருந்தனர்.

நீதிமன்றத்தில் தாம் பெற்றிருக்கும் தடை உத்தரவின்படி போராட்டக்காரர்கள் நடைபாதையில் செல்பவர்களுக்கும் வாகனங்களுக்கும்இடையூறுவிளைவிக்க முடியாதுஎன்றுபொலிஸார்தெரிவித்தனர்.

ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், நிதி அமைச்சு, காலி முகத்திடல் பகுதி ஆகியவற்றுக்குள் போராட்டக்காரர்கள் நுழைவதற்கும் பொலிஸார் நீதிமன்றத்தில் தடை உத்தரவு பெற்றிருக்கின்றனர்.

இன்றைய போராட்டம் கறுவாத் தோட்டப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல வீதிகளிற்குள்ளும் நுழைவதற்கு முழுமையாகத் தடை விதிக்கும்படியே பொலிஸார் நீதிமன்றத்தைக் கேட்டிருந்தனர்.

ஆனால் கோட்டை நீதிவான் அதற்கு மறுப்புத் தெரிவித்தார். ணஉள்ளூராட்சி சபைத் தேர்தலை பிற்போடுவதற்கு எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகளை உடன் நிறுத்தும்படி போராட்டக்காரர்கள் குரல் எழுப்பினர்.

# நாடகப் பிரதி வழங்கும் நிகழ்வு

திருமறைக் கலாமன்றத்தால் ஆண்டுதோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் மேடையேற்றப்படும் இயேசுவின் பாடுகள், சாவு, உயிர்ப்பை சித்திரிக்கும்திருப்பாடுகளின் நாடகத்திற்கான பிரதி வழங்கும் வைபவம் தவக்காலத்தின்தொடக்க நாளாகிய நாளைமறுதினம் 22ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு ‘கலைஞான சுரபி’ தியான இல்லத்தில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் திருமறைக் கலாமன்றத்தின் தொடக்ககால இயக்குநர்களில் ஒருவரும், ஊறணி பங்குத்தந்தையுமான அருள்பணி தி.இ.தேவராஜன் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கு-வார். ஆற்றுகையில் பங்கேற்கவுள்ள கலைஞர்களுக்கான பிரதிகளையும் வழங்கி வைப்பார்.

பிரதி வழங்கும் வைபவத்தில் வழமையாக திருப்பாடுகளின் நாடகத்தில் பங்கேற்கின்ற அனைத்துக் கலைஞர்களையும், புதி தாக இணைந்து கொள்ள விரும்புபவர்களையும்கலந்துகொள்ளுமாறு திருமறைக் கலாமன்றம் அழைப்பு விடுத்துள்ளது.

இவ்வாண்டு திருப்பாடுகளின் நாடகம் மார்ச் மாதம் 30 ஆம் 31 ஆம் திகதிகளிலும் ஏப்பிரல் மாதம் 01ஆம் 02 ஆம் திகதிகளிலுமாகநான்குநாள்களுக்கு ‘குருதி கழுவிய குவலயம்’ என்னும் பெயரில் மாலை 6.45 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதான வீதியில்அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.02.2023 இல் வெளியிடப்பெற்றது.